REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஏப்ரல் 19 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 93 | Friday 19, April, 2024 | 16 பக்கங்கள் | 50/-

## தங்கத்தின் விலை மீண்டும் நேற்று திடீர் அதிகரிப்பு

### 22 கரட் ஒரு பவுண் 1,76,600 ஆக பதிவு



22 கரட் தங்கத்தின் விலை அதிகரித்துள்ளது. ஒரு பவுண் விலை 1,76,600 ரூபாவாக நேற்று கொழும்பு செட்டியார் தெருவில் பதிவாகியுள்ளது. 06




# ரஷ்ய படையில் கூலிவேலைக்கு ஓய்வுபெற்ற படைவீரர்கள்

## முகவராக செயற்பட்ட ஓய்வு பெற்ற இராணுவ மேஜரும் முகவரும் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

**எமது நாட்டு ஓய்வுபெற்ற படைவீரர்களை திட்டமிட்ட வகையில் கூலியாட்களாக ரஷ்யாவுக்கு அனுப்பும் திட்டம் முறியடிப்பு**

ரஷ்ய இராணுவத்தில் கூலி ஆட்களாக தொழில்புரிவதற்காக இலங்கையிலிருந்து ஓய்வுபெற்ற இராணுவ வீரர்களை ரஷ்யாவுக்கு அனுப்பும் திட்டமிட்ட வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்த ஓய்வுபெற்ற மேஜர் ஒருவரும் மற்றுமொரு முகவரும் குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்தின் விசேடசெயலணியில் பணி புரிந்து ஓய்வுபெற்றுள்ள இராணுவ மேஜரை வாரியபொலயில் வைத்து கைது செய்துள்ளதுடன் மற்றைய நபரான முகவரை கண்டி, திகனையில் வைத்து கைது செய்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த இருவருக்கும் மேலதிகமாக மேலும் சிலரும் இந்த வர்த்தகத்தில் தொடர்புபட்டுள்ளதாகவும் அவர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள இராணுவ மேஜர், விஜேபண்டார எனவும் முகவர், பந்துல எனவும் குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்த சட்டவிரோத வர்த்தகத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக கண்டி, கட்டுகஸ்தொட்டை வீதியில் பாரியளவில் முகவர் நிலையமொன்று நடத்தப்பட்டுவந்துள்ளதுடன் அதனுடன் தொடர்புடைய சத்துரங்க என்ற நபர் ரஷ்யாவுக்கு தப்பிச் சென்று அங்கு மறைந்து வாழ்வதாகவும் அவரே அங்கிருந்து இந்த வர்த்தகத்தை முன்னெடுத்து வருவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளதாக குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவர் இந்நாட்டில் வசித்தபோது முகவர் நிலையத்தை முன்னேற்றும் வகையில் யுவதியொருவர் மற்றும் ஜனரஞ்சக தொலைக்காட்சி நாடக நடிகர் உள்ளிட்ட மேலும் சிலரும் அதில் சம்பந்தப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. 06

## பிரசுரித்தமைக்கு வருந்துகிறோம்

2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளியான தினகரன் பத்திரிகையின் முதல் பக்கத்தில், 'ரஷ்யாவிலிருந்து இரண்டு தரமற்ற புற்றுநோய் மருந்துகள் இறக்குமதி' என்ற தலைப்பிலும் “ரூ. 3.8 பில் இழப்பு நிதி நட்டத்தை விடவும் மரணங்கள் மதிப்பிட முடியாதவை” என்ற உப தலைப்பிலும் செய்தி பிரசுரிக்கப்பட்டமைக்காக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் DMR 1986 /2019 ஆம் இலக்க வழக்கின் முறைப்பாட்டுக்காரரான பார்மெஸ் (தனியார்) லிமிடட் நிறுவனத்திற்கு எந்த வகையிலாவது பாதிப்பு அல்லது முறைப்பாட்டுக்காரரின் நற்பெயருக்கு களங்கம் அல்லது, அவமதிப்பு ஏற்பட்டிருக்குமாயின், அதுதொடர்பில் 'தினகரன்' பத்திரிகையும், தினகரன் பத்திரிகையின் ஆசிரியராக செயல்பட்ட கே. குணராசா அவர்களும், பத்திரிகையை வெளியிட்ட த அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர் ஒப் சிலோன் லிமிடட் நிறுவனமும் முறைப்பாட்டு நிறுவனத்திடம் தனது வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறது.

## ஆட்பதிவு திணைக்களத்தின் மத்திய மாகாண அலுவலகம் நுவரெலியாவில்

**நுவரெலியா தினகரன் நிருபர்**

ஆட்பதிவு திணைக்களத்தின் மத்திய மாகாண அலுவலகம் எதிர்வரும் 22ஆம் திகதி நுவரெலியாவில் திறக்கப்படவுள்ளதாக ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் ஜீ. பிரதீப் சப்புதந்திரி நேற்று தெரிவித்தார்.

இதுவரை காலமும், ஆட்பதிவு திணைக்களத்தின் மத்திய மாகாண அலுவலகம் கண்டியில் சிறிய அலுவலகமாக இயங்கிவந்தது. இந்நிலையில், 06

## ஈஸ்டர் தாக்குதலில் பலியானோருக்கு அஞ்சலி செலுத்த அழைப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 21 ஆம் திகதி அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் காலை 8.45 மணிக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு 06

## இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி நுவரெலியாவில் சந்திப்பு



நுவரெலியா மாவட்ட இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இளம் அரசியல் பிரதிநிதிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (18) சந்தித்து கலந்துரையாடினார். நுவரெலியா ஜனாதிபதி மாளிகையில் இச்சந்திப்பு நடைபெற்றது.

## மின்சாரத்துறை மறுசீரமைப்பு வர்த்தமானி நேற்று வெளியீடு



### அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

மின்சாரத் துறை மறுசீரமைப்பு தொடர்பான திருத்தச் சட்டமூலம் நேற்று வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ளது. எதிர்வரும் வாரத்தில் பாராளுமன்றத்தில் இதை, சமர்ப்பிக்கவுள்ளதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். 06

## அண்மைக்கால உயிரிழப்புகளுக்கு மாரடைப்பே முக்கிய காரணம்



### தொற்றா நோய்கள் பிரிவு விசேட மருத்துவர் ஷெரில் பாலசிங்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் உயிரிழப்புகளுக்கு மாரடைப்பே முக்கிய காரணமாக அமைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. சுகாதார அமைச்சின் சம்பந்தப்பட்ட பிரிவு இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது:

2010 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை அரசாங்க வைத்தியசாலைகளில் பதிவான அதிக 06

## மர்கஸ் தாருல் ஈமான்

தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா கலாபீடம்
சம்மாந்துறை

### புதிய மாணவர் அனுமதி – 2024/25

சகல வசதிகளையும் உள்ளடக்கிய, புதுப்பொலிவுடன் இயங்கத் தயாராகும் இக்கல்வி நிறுவனத்தில் சேர விரும்பும் மாணவர்கள் இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் 23.04.2024 செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

- 6ம், 7ம், 8ம் ஆண்டு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்
- தந்தையை இழந்த பிள்ளைகளுக்கு தங்குமிட, உணவு வசதிகள் இலவசமாக செய்து கொடுக்கப்படும்.
- விடுதியில் தங்கியிருந்து படிக்க விரும்பும் ஏனைய மாணவர்களும் நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்கலாம்

பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வி, விளையாட்டு தொடர்பான சான்றிதழ்கள், தந்தையை இழந்த மாணவர்களாயின் தந்தையின் மரண அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றை அன்றைய தினம் சமர்ப்பித்தல் வேண்டும்.

தொடர்புகளுக்கு:
067 2261340, 076 3761115
077 3136667, 077 4673964

MARKAZ DHARUL EMAN
DHARUTH THOWHEED ASSALAFIYYA
(SAMMANTHURAI BRANCH),
MALKAMPITIYA ROAD, SAMMANTHURAI

## சுற்றுச்சூழல் மாசு: குற்றங்களை அறிவிக்க தொலைபேசி இலக்கங்கள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சுற்றுச்சூழல் மாசு தொடர்பான தகவல்களை அறிவிப்பதற்காக 1997 மற்றும் 1981 என்ற அவசர தொலைபேசி இலக்கங்களை பொலிஸ் திணைக்களம் வெளியிட்டுள்ளது. சுற்றாடல் அழிவு தொடர்பான சுற்றிவளைப்புக்களை 06

## இந்திய பாராளுமன்ற தேர்தல் இன்று முதல் கட்டம் ஆரம்பம்

### 102 தொகுதிகளில் வாக்குப்பதிவு



இந்தியாவின் 18 ஆவது பாராளுமன்ற பொதுத்தேர்தல் (லோக்சபா) இன்று (19) ஆரம்பமாகிறது.

இந்திய பாராளுமன்றம் பிரதிநிதிகள் சபை (லோக்சபா) மற்றும் மேல் சபை (ராஜ்யசபா) ஆகியவற்றைக் கொண்டுள்ளது. 543 மக்களவைத் தொகுதிகளுக்கு இன்று பொதுத் தேர்தல் ஆரம்பமாகிறது. இந்திய பொதுத் தேர்தல் 06

## ஸ்ரீ.ல.சு.க: மைத்திரியின் பதவி தடையுத்தரவு மே 09 வரை நீடிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுவதைத் தடுக்கும் வகையில், ஏற்கனவே நீதிமன்றம் பிறப்பித்திருந்த இடைக்கால தடையுத்தரவு எதிர்வரும் மே மாதம் (09) வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட மனு தொடர்பான விசாரணை நேற்று நடைபெற்றது. இதன்போது கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இவ்வுத்தரவை பிறப்பித்தது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மேற்படி முறைப்பாட்டு 06

## செவ்வாய் கிரகத்தின் ஆய்வுக்காக இலங்கை விஞ்ஞானிக்கு அழைப்பு



செவ்வாய் கிரகத்தில் ஆய்வு நடத்துவதற்கு இலங்கை விஞ்ஞானி ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஹூஸ்டனில் உள்ள ஜான்சன் விண்வெளி மையத்தில், நாசாவால் கட்டப்பட்ட செவ்வாய் கிரகத்தின் சுற்றுச்சூழல் பண்புகள் கொண்ட வாழ்விடத்தில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் நான்கு பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மே (10) நாசாவின் 06

## மியன்மாரில் மீட்கப்பட்ட இலங்கையர் நாடு திரும்பினர்



மியன்மாரின் மியாவாடி இணையக் குற்றப் பகுதியிலிருந்து மீட்கப்பட்ட இலங்கையர்கள் எட்டுப் பேரும் நாட்டை வந்தடைந்தனர்.

தாய்லாந்திலிருந்து நேற்று (18) காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த UL 403 என்ற விமானத்தில் இவர்கள் நாடு 06

## இவ் வருடக்காலாண்டில் ஏழு இலட்சம் சுற்றுலா பயணிகள்

### நாட்டின் சுற்றுலாத்துறை பாரிய முன்னேற்றம்



நாட்டில், இந்த வருடத்தின் முதல் காலாண்டில் ஏழு இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. இக்காலப்பகுதியில், மொத்தம் 718,315 சுற்றுலா பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

அத்துடன் ஏப்ரல் மாதத்தின் முதல் 15 நாட்களில் 82,531 06

# நகர்வலம்



### அநுராதபுரம் போதனா வைத்தியசாலை வளாகத்தில்

## நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்கள் பூர்த்தியின்றி அழிவடைந்து வருவதாக பொதுமக்கள் கவலை

### பல கோடி ரூபா வீண்விரயம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பல்வேறு பிரிவுகளின் உபயோகத்திற்காக பல கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்கள் அனைத்தும் இடை நடுவில் கைவிடப்பட்டு அழிவடைந்து வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் ஒப்பந்தக்காரர்கள் அதனை இடை நடுவில் கைவிட்டுச் சென்றுள்ளதாக தெரிய வந்துள்ளது.

அநுராதபுரம் வைத்தியசாலைக்கு முன்னால் 650 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணம் செலவு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட அவசர சிகிச்சை பிரிவு கட்டடம் தற்போது பெயர் பலகைக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் தாதியர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட மாடிக்கட்டடம் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது.



தாதியர் பயிற்சி பாடசாலை கட்டடம் தற்போது இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளதுடன் புற்று நோயாளர்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடி கட்டடத்தின் 1 ஆவது மாடி மட்டும் பாதி புனரமைக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டுள்ளது.

நூற்றுக்கணக்கான மைல்கள் தூரத்தில் இருந்து சிகிச்சைக்காக வரும் நோயாளர்கள் முன்னைய நாளே வைத்தியசாலைக்கு வந்து இலக்கப்படி தங்கக்கூடியவர்களாக காணக்கூடியதாகவுள்ளது.

கனிஷ்ட ஊழியர்களுக்காக 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கட்டடம் இடையில் கைவிடப்பட்டுள்ளது. போதைக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கு நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் சிதைவடைந்து அதன் கம்பிகள் துண்டிக்கப்பட்டு கொண்டு செல்லப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றன.

பல்வேறு தூர பிரதேசங்களில் இருந்து சிகிச்சைக்காக வரும் நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருவதாகவும் அவர்களுக்கு இருப்பதற்கு இடமில்லையென்றும் சிகிச்சைக்காக வருபவர்கள் பல்வேறு இடங்களில் இரவில் தூங்கி வருவதாகவும் இலங்கை சுதந்திர சேவை சங்கத்தின் அமைப்பாளர் எஸ்.விஜேசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் துலான் சமரவீரவிடம் தகவல் அறியும் சட்டத்தின்படி கிடைக்கப்பெற்ற தகவல்களின் மூலம் நான்கு கட்டடங்களின் தகவல்கள் மாத்திரம் அவரிடம் இருப்பதாகவும் ஏனைய கட்டடங்களின் நிதி மற்றும் நிர்மாணப்பணி இடை நிறுத்தம் தொடர்பில் சுகாதார அமைச்சிடமே தகவல்களை பெற்றுகொள்ள முடியுமென தெரிவித்தார்.

### அநுராதபுரம் மாவட்டத்தில்

## ஒவ்வொரு மாதமும் 130 சிறுநீரக நோயாளிகள் கண்டுபிடிப்பு

### சிறுநீரக நோய் நிபுணர் டாக்டர் நதீக்கா தெரிவிப்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுர மாவட்டத்தில் ஒவ்வொரு மாதமும் சுமார் 130 புதிய சிறுநீரக நோயாளர்கள் கண்டறியப்படுவதாக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் சிறுநீரக நோய் நிபுணர் டாக்டர் நதீக்கா விக்கிரமாராச்சி தெரிவித்துள்ளார்.

அதன்படி கடந்த 2019 மற்றும் 2023 காலப்பகுதியில் மாவட்டத்தில் கிட்டத்தட்ட 20,000 சிறுநீரக நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் அந்த காலகட்டத்தில் சுமார் 4000 சிறுநீரக நோயாளிகள் இந்த நோயினால் இறந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த வருடம் ( 2023 ) 1200 புதிய சிறுநீரக நோயாளர்கள் பதிவாகியிருந்ததாகவும் இவர்களில் அதிகமானோர் ஆண்கள் எனவும் வைத்தியர் தெரிவித்துள்ளார். மேலும் குறிப்பிட்ட இப்பகுதிகளில் கிடைக்கும் நீரின் பயன்பாடு வரட்சியான காலநிலையால் ஏற்படும் நீர்ச்சத்து குறைபாடு மற்றும் மரபியல் பரவல் போன்றவையும் சிறுநீரக நோய்க்கு காரணம் எனவும் சிறுநீரக நோய் நிபுணர் டாக்டர் நதீக்கா விக்கிரமாராச்சி மேலும் தெரிவித்துள்ளார்.

## கற்பிட்டி அல் அக்ஸாவில் இடம்பெற்ற சிரமதான பணியில் பலரும் பங்கேற்பு



**புத்தளம் தினகரன் நிருபர்**

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்ட சிரமதான பணிகள் பாடசாலையின் பிரதி அதிபர் எஸ்.எப். சாஜினாஸ் தலைமையில் (16) இடம்பெற்றது.

இந்த சிரமதான பணிக்கு பாடசாலையின் அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம் என்பன முழுமையான பங்களிப்பை வழங்கியதுடன் பாடசாலையின் ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் மற்றும் பழைய மாணவர்கள் என அனைத்து தரப்பினரும் இச் சிரமதான பணியில் கலந்து கொண்டு தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கியிருந்தனர்.

அல் அக்ஸா தேசிய பாடசாலையின் சுற்றுப்புறச் சூழலை முழுமையாக சுத்தப்படுத்தி நீண்ட விடுமுறையின் பின் பாடசாலைக்கு சமுகமளிக்கும் மாணவர்களின் மனங்களில் புத்துணர்ச்சியும் உத்வேகமும் ஏற்படச் செய்யும் வகையில் பாடசாலையின் சுற்றுப்புறச் சூழலை சிரமதானத்தின் ஊடாக ஏற்படுத்தி தந்தமைக்கு பாடசாலையின் நிர்வாகம் சார்பாக இச் சிரமதான பணியில் பங்குபற்றிய மற்றும் இதற்கு உதவிகள் ஒத்தாசைகள் வழங்கிய சகலருக்கும் தமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதாக பிரதி அதிபர் எஸ் எம் சாஜினாஸ் மேலும் தெரிவித்தார்.

## சட்டவிரோத துப்பாக்கியுடன் ஒருவர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

சட்டவிரோதமான முறையில் உள்நாட்டில் தயாரித்த துப்பாக்கியொன்றினை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை கலன்பிந்துனுவெவ பொலிஸார் கைது செய்துள்ளனர். பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய கடந்த 17 ஆம் திகதி மாலை கலென்பிந்துனுவெவ பொலிஸ் பிரிவின் படிகாரமடுவ பகுதியில் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் துப்பாக்கியொன்றையும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்டவர் 50 வயதுடைய கலென்பிந்துனுவெவ பகுதியை வசிப்பிடமாக கொண்டவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## இராணுவ சேவையை விட்டு சட்டரீதியாக வெளியேறுவதற்கான பொதுமன்னிப்பு காலம்

முறையான விடுமுறையின்றி சேவையில் இருந்து விலகியிருந்த இராணுவ வீரர்களுக்கு சட்டரீதியாக இராணுவ சேவையை விட்டு வெளியேறுவதற்கு பொது மன்னிப்பு காலம் பிரகடனம் செய்தல்.

1. முறையான விடுமுறையின்றி கடமைக்கு சமுகமளிக்காத மற்றும் சட்டவிரோதமான முறையில் சேவையை விட்டு வெளியேறியுள்ள இராணுவத்தினருக்கு 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி முதல் 2024 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி வரை பொது மன்னிப்பு காலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது மன்னிப்புக் காலத்தின் போது, தமது படையணி தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு சட்டரீதியாக சேவையை விட்டு வெளியேற வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2. 2024 ஏப்ரல் 02 இற்கு முன்னர் முறையான விடுமுறையின்றி பணிக்கு சமுகமளிக்காத அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் பின்வரும் ஆவணங்களுடன் தத்தமது படையணி தலைமையகத்திற்கு மட்டும் சமுகமளிக்க வேண்டியதோடு அதனை தொடர்ந்து இராணுவ சேவையில் இருந்து வெளியேறும் அடிப்படை அனுமதி வழங்கல் நடவடிக்கைகள் 72 மணித்தியாலங்களுக்குள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அ. இராணுவ அடையாள அட்டை (இராணுவ அடையாள அட்டை தொலைந்து விட்டது எனின் சமீபத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட பொலிஸ் அறிக்கையின் நகல்).

ஆ. தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதி பத்திர நகல்.

இ. சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வரவு வைக்கப்பட்டுள்ள வங்கி புத்தகத்தின் நகல்.

ஈ. கடைசியாக பெற்றுக் கொண்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளின் சம்பளப் பட்டியல் நகல் (இருந்தால் மட்டுமே).

3. முறையான விடுமுறையின்றி பணிக்கு சமூகமளிக்காதது தவிர வேறு சட்ட விரோத நடவடிக்கைகளில் சம்பந்தப்படாதவர்கள் மற்றும் முறையான விடுமுறை இன்றி தற்போது வெளிநாட்டில் இருக்கும் இராணுவ உறுப்பினர்கள் மீண்டும் சமுகமளிக்காது தனது படையணியுடன் தொடர்பு கொண்டு இந்த பொது மன்னிப்புக் காலத்தின் போது சட்டரீதியாக தமது சேவையை விட்டு வெளியேறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## புத்தளம் — மீ ஓயா ஆற்றில் நீராடிய குடும்பஸ்தர் பலி

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் மீஓயா ஆற்றில் தனது நண்பர்களுடன் குளிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர், நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை (14) இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புத்தளம், எருக்கலம்பிட்டி (நாகவில்லு) பகுதியைச் சேர்ந்த அபுல் ஹுதா முஹம்மது அப்சிர் (வயது 38) எனும் இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். சுற்றுலா நிமித்தம் தனது நண்பர்களுடன் மீ ஓயா ஆற்றில் குளிக்கச் சென்ற போது, நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அங்கிருந்த நண்பர்கள் குறித்த நபரை உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு



சென்ற போதிலும், அவர் உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி தேசமான்ய பதுர்தீன் முஹம்மது ஹிஸாம், உயிரிழந்த நபரின் ஜனாஸா மீதான மரண விசாரணையை நடத்தினார்.

அத்துடன், பிரேத பரிசோதனையின் பின்னர் நீரில் மூழ்கியமையால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்து ஜனாஸா குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## ஸாஹிரா மாணவன் அர்ஹம் தேசிய மட்டத்துக்கு தெரிவு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**



அகில இலங்கை கணித ஒலிம்பியாட் போட்டியில் பிரிவு 03 இல் தேசிய மட்ட போட்டிக்கு அநுராதபுரம் ஸாஹிரா கல்லூரி மாணவன் ஏ.ஆர். அர்ஹம் அஹமட் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் ஆசிரியர் எம்.எஸ். அஹமட் ராபி மற்றும் ஆசிரியை எம்.ஜே. பர்ஹம் ஆகியோரின் புதல்வராவர்.

## இம்முறை 15,000 ஏக்கரில் நிலக்கடலை பயிரிடுவதற்கு அரசாங்கம் திட்டம்

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

இம்முறை சிறுபோகத்தின் போது அநுராதபுரம் மாவட்டத்தில் அதிகளவான நிலப்பரப்பில் நிலக்கடலையினை பயிரிடுவதற்கு திட்டமிட்டுள்ளதாக விவசாய திணைக்கள மாவட்ட பணிப்பாளர் தேனுவர தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் இம்முறை சிறுபோகத்தின் போது 15,000 ஏக்கரில் அதிக விளைச்சலினை தரக்கூடிய நிலக்கடலையினை செய்வதற்கு விவசாய அமைச்சு திட்டமிட்டுள்ளது. அதற்கமைவாகவே இம்முறை அநுராதபுரம் மாவட்டத்திலும் அதிகளவிலான நிலப்பரப்பில் நிலக்கடலையினை செய்கை பண்ணுவதற்கு திட்டமிட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

நிலக்கடலை செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு அரசாங்கத்தினால் இலவசமாக தேவையான நிலக்கடலை விதைகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன்



செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் இதன்மூலம் பெரிதும் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக விவசாய திணைக்கள அநுராதபுரம் மாவட்ட பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.



CENTURY 21 சொத்துக்கள் வர்த்தக நிறுவனத்தின் விருது வழங்கும் நிகழ்வு கொழும்பு வோட் பிளேசிலுள்ள நிறுவனத்தின கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. நிகழ்வில் 30 தொழில்முயற்சியாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டதுடன் அவர்கள் இணைந்து கொண்டு எடுத்த படம்.

படம்: சுதத் மலவீர

## புத்தளம் ஸாஹிரா பாடசாலையின் வருடாந்த ஒன்றுகூடல்

**புத்தளம் தினகரன் நிருபர்**




புத்தளம் ஸாஹிரா தேசிய பாடசாலையின் ஸஹீரியன்ஸ் 92 மாணவர்களின் வருடாந்த ஒன்றுகூடலும், இராப்போசன விருந்தும், பொதுக் கூட்டமும் அண்மையில் நடைபெற்றது. இதில் சுமார் 32 பழைய மாணவர்கள் கலந்துகொண்டனர். பல்வேறு விடயங்கள் இதன்போது கலந்தாலோசிக்கப்பட்டன.

சமூகத்தில் இருக்கின்ற குறைபாடுகள், சமூக மேம்பாட்டு நலத்திட்டங்கள், பாடசாலை அபிவிருத்தி திட்டங்கள், பாடசாலையில் காணப்படும் குறைபாடுகள் என பல விடயங்கள் ஆலோசிக்கப்பட்டன. இஸட் 92 அமைப்பின் நடப்பு வருட நிர்வாக தலைவராக கலாநிதி இல்ஹாம் மரிக்கார் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

செயலாளராக மின்ஹாஸ் மஹ்மூட்டும், பொருளாளராக எம். காதரும், ஊடக இணைப்பாளராக பாரூக் பதீன் ஆசிரியரும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஏப்ரல் 19 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 04.44
ளுஹர் - 12.11
அஸர் - 03.21
மஃரிப் - 06.19
இஷா - 07.30

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் சித்திரை 06
ராகுகாலம் : பகல் : 10.32 -12.02 வரை
சுபநேரம் : காலை : 6.02 - 7.32 வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



கொழும்பு புறக்கோட்டை Floating Market

# அனுமதியற்ற கடைகள் பின்னணியில் ஒழுங்கமைக்கப்பட்ட கடத்தல்காரர் குழு



கொழும்பு புறக்கோட்டையில் அனுமதியற்ற விதத்தில் கடைகளை நிர்மாணிப்பதன் பின்னணியில் ஒழுங்கமைக்கப்பட்ட கடத்தல் காரர் குழுவொன்று, இருப்பதாக கொழும்பு மாநகர சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கொழும்பு மிதக்கும் சந்தைக்கு முன்பாக இடித்து அகற்றப்பட்ட 21 கடைகளும் கடத்தல்காரர்களால் கட்டப்பட்ட சட்டவிரோத கட்டுமானங்களே என, கொழும்பு மாநகர சபையின் நகர அழகுபடுத்தல் திட்ட இணைப்பாளர் பொறியியலாளர் குமுது போகஹவத்த தெரிவித்தார்.

கடத்தல்காரர்கள் கடைகளை தினசரி வாடகைக்கு வேறு நபர்களுக்கு குத்தகைக்கு விட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சட்டவிரோத கட்டுமானம் குறித்து முதன் முறையாக முறைப்பாடு கிடைத்தால், அதனை அகற்றுவதற்கு மாநகர சபை நடவடிக்கை எடுப்பதாக அவர் கூறினார்.

எனவே, இவ்வாறான ஒழுங்கமைக்கப்பட்ட கடத்தல்காரர்களுக்கு இரையாகி பணத்தை வீணடிக்க வேண்டாமென, கொழும்பு மாநகர சபையும் நகர அபிவிருத்தி அதிகார சபையும் மக்களிடம் கேட்டுள்ளன.

அனுமதி பெறாத கடைகளை அகற்றும் முன், கடை உரிமையாளர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான முதல் அறிவிப்பு கடந்த ஆண்டு டிசம்பர் 20 இல், நகர அபிவிருத்தி அதிகாரசபையால் வெளியிடப்பட்டது. இதையடுத்து, ஜனவரி (02) அனைத்து கடை உரிமையாளர்களுக்கும் 14 நாட்களுக்குள் கடைகளை அகற்றுமாறு கொழும்பு மாநகர சபை எழுத்து மூலம் அறிவித்தல் விடுத்துள்ளது. பல தடவைகள் இந்த கடைகளின் உரிமையாளர்களை அவ்விடத்தை விட்டு வெளியேறுமாறு, வாய்மொழி அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாக கொழும்பு மாநகர சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிடுகின்றன.

ஆனால், குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அகற்றப்படாததால் கடந்த 16, 17 ஆகிய இரு தினங்களில் இந்த அனுமதியற்ற கடைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொறியியலாளர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இந்த கடைகளை அவற்றிலிருந்து அகற்றுவதற்கு நகர சபையினால் செலவிடப்படும் பணத்தை, மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படுமென கொழும்பு மாநகர சபையின் நகர அழகுபடுத்தல் திட்ட இணைப்பாளர் பொறியியலாளர் குமுது போகஹவத்த தெரிவித்தார்.

## அரசின் 'யுக்திய' நடவடிக்கை அமைச்சர் டிரான் அலசிடம்

ஜப்பான் தூதுவர் பாராட்டு

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்றது.

குற்றச் செயல்களை ஒடுக்குவதற்கும் போதைப்பொருள் ஒழிப்புக்காகவும் இலங்கை பொலிஸார் நடைமுறைப்படுத்தும் 'யுக்திய' நடவடிக்கையை பாராட்டுவதாக ஜப்பானிய தூதுவர் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் தெரிவித்தார்.

கடவுச்சீட்டு மற்றும் தேசிய நல்லிணக்க வேலைத் திட்டம் தொடர்பில் மற்றும் விசா வழங்குவது தொடர்பிலும் தூதுவர் மற்றும் அமைச்சர் ஆகியோருக்கிடையில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள சமூக பொலிஸ் குழு வேலைத்திட்டத்தின் வெற்றி மற்றும் முக்கியத்துவம் குறித்து அமைச்சர் ஜப்பானிய தூதுவரிடம் தெளிவுபடுத்தினார்.

**விசேட அறிவித்தல்**

கொரியமொழி பரீட்சையில் உற்பத்தி பிரிவின் மூன்றாம் நிலையில் (03) மற்றும் மீன் பிடி பிரிவின் இரண்டாம் நிலையில் (02) சித்தி பெற்ற உங்களுக்கு இடம் பெறவிருக்கும் திறன் பரீட்சை தொடர்பான விடயங்களை அறிந்து கொள்வதற்கு பணியகத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளத்திற்கு (www.slbfe.lk) பிரவேசிக்கவும்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்.

# சர்வதேச இறையாண்மை பத்திரதாரர்களுடன் பேச்சு

## இலங்கைக்கு உதவ IMF தயார்

சர்வதேச இறையாண்மை பிணைமுறி பத்திரத்தைக் கொண்டுள்ளவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இலங்கைக்கு உதவ தயாராகவுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இலங்கை அரசாங்கத்தினால் திருப்பிச் செலுத்தப்படாத சுமார் 12 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான சர்வதேச பிணை முறி பத்திரங்களை மறுசீரமைக்க, மே மாதத்தின் நடுப்பகுதிக்குள் முதலீட்டாளர்களுடன் ஒரு உடன்படிக்கையை மேற்கொள்ளும் என *Bloomberg* இணையத்தளம் தெரிவித்துள்ளது.

*Standard Chartered Strategic information* மேற்கோள் காட்டி, *Bloomberg* இணைய தளம் இலங்கையில் கடன் மறுசீரமைப்பு தொடர்பான சமீபத்திய தரவுகளை தெரிவித்திருந்தது.

இலங்கையால் திருப்பி செலுத்தப்படாத 12 பில்லியன் அமெரிக்க டொலர்கள் சர்வதேச பிணைமுறி பத்திரங்களை மறுசீரமைக்க, மே மாத நடுப்பகுதியில் இலங்கை, முதலீட்டாளர்களுடன் உடன்படிக்கையை மேற்கொள்ளும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் சர்வதேச இறையாண்மை பிணைமுறி பத்திர உரிமையாளர்களின் பிரதிநிதிகள் குழுவுடன் நடத்தப்பட்ட ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தை தோல்வியடைந்தாலும் அடுத்த சில வாரங்களில் இலங்கை மீண்டும் ஒரு உடன்பாட்டை எட்ட முடியும் என *Bloomberg* இணையத்தளம் தெரிவித்துள்ளது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியுடன் இணைக்கப்பட்ட "மேக்ரோ இணைக்கப்பட்ட பிணைப்புகள்" தொடர்பில் சர்வதேச பிணை பத்திரதாரர்களுடன் இலங்கையால் உடன்படிக்கைக்கு வரமுடியவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

06






தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் சித்திரை மாதம் 06ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷவ்வால் பிறை 10

### குறள் தரும் சிந்தனை



சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை

*தம்மைத் தாமே காத்துக்கொண்டு சிறந்த பண்புடன் வாழும் மகளிரை அடிமைகளாக நடத்த எண்ணுவது அறியாமையாகும்.*

# இலங்கைக்கு நன்மை பயக்கும் சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம்

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற்று வரும் இலங்கையை நிலைபேறான அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதற்கான வேலைத்திட்டங்கள் பரந்த அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவ்வேலைத்திட்டங்கள் பயனளிக்கவும் ஆரம்பித்துள்ளன.

நாடு 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டது. மக்களும் பல்வேறுவிதமான பாதிப்புகளுக்கும் அசௌகரியங்களுக்கும் முகம் கொடுத்தார்கள்.

அதே ஆண்டின் ஜுலை மாதப் பிற்பகுதியில் நாட்டின் தலைமையை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இவ்வாறான பொருளாதார வீழ்ச்சி நாட்டில் மீண்டும் ஒருபோதும் ஏற்பட்டு விடக்கூடாது. அதற்கு அதற்கு இடமளிக்கவும் முடியாது என்பவற்றை இலக்காகக் கொண்டு உறுதியான பொருளாதார மேம்பாட்டு திட்டங்களை ஆரம்பித்தார்.

அந்த வகையில் முதலீட்டு ஊக்குவிப்பு திட்டங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளன. இலங்கை போன்ற நாடொன்றின் பொருளாதார முன்னேற்றத்திற்கு முதலீடு மிகவும் அவசியம். உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகள் இன்றி முன்னேற்றப்பாதையில் பயணிப்பது என்பது சாத்தியமற்ற காரியமாகும்.

இந்தப் பின்புலத்தில்தான் முன்னாள் ஜனாதிபதி மறைந்த ஜே.ஆர். ஜயவர்தன சுதந்திர வர்த்தக வலயத் திட்டத்தை 1978 இல் இலங்கைக்கு அறிமுகப்படுத்தினார். அதன் ஊடாக கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயம் முதன் முதலாக நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. அங்கு பல நாடுகளையும் சேர்ந்த நிறுவனங்கள் முதலீடுகளை மேற்கொண்டன. அது புதிய தொழில்வாய்ப்புக்களை உருவாக்கும் வலயமாக மாத்திரமல்லாமல் நாட்டுக்கு வருடா வருடம் அந்நிய செலாவணியை ஈட்டிவரும் நிலையமாகவும் அமைந்துள்ளது.

கட்டுநாயக்க முதலீட்டு வலயத்தில் ஏற்றப்பட்ட முன்னேற்றத்தைத் தொடர்ந்து பியகம, கொக்கல உள்ளிட்ட பல இடங்களிலும் முதலீட்டு வலயங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அந்த முதலீட்டு வலயங்களுக்கும் முதலீடுகள் வந்து சேர்ந்தன.

இவ்வாறான பின்னணியில், நாட்டில் நிலைபேறான பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ள தற்போதைய சூழலில் முதலீடுகள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு இருக்கின்றது. இதற்கு இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதை இலக்காகக் கொண்டு சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொண்டுள்ள ஒப்பந்தம் பெரிதும் உதவக்கூடியதாக அமைந்துள்ளது.

குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டதைத் தொடர்ந்து இலங்கை பெற்றுக்கொள்ளும் முதலீடுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இது முதலீட்டாளர்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்பட்டிருப்பதன் வெளிப்பாடாகும்.

இவ்வாறான சூழலில், முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம குறிப்பிட்டிருப்பதாவது, '2023 ஆம் ஆண்டில் 1.5 பில்லியன் அமெரிக்க முதலீடுகளை நாடு பெற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 1.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடுகளாக அதிகரித்துக் கிடைக்கப்பெற்றது. அதனால் இவ்வாண்டு இது 4 பில்லியன் முதல் 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது' என்றுள்ளார்.

உண்மையில் சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்டிருக்கும் உடன்படிக்கையானது, இலங்கை தொடர்பில் புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்புக்களையும் உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் ஏற்படுத்தியுள்ளன. இது வெளிப்படையானது. முதலீடுகளில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பும் இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

அதேநேரம் இந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து நாட்டின் ஏனைய துறைகளிலும் முன்னேற்றங்கள் வெளிப்பட்டுள்ளன. குறிப்பாக உல்லாசப் பயணத்துறை அடைந்துள்ள முன்னேற்றங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

இந்நிலையில் இலங்கைக்கு வருகை தரும் உல்லாசப் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில் ஏற்கனவே கடந்த மார்ச் 31 ஆம் திகதி வரையும் சீனா, ரஷ்யா, இந்தியா, மலேசியா, ஜப்பான், இந்தோனேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு இலவச விஸாத் திட்டம் முன்னோடித்திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாறான நிலையில் இத்திட்டத்தை மேலும் 50 நாடுகளுக்கு அறிமுகப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டிருப்பதாக சுற்றுலாத்துறை அமைச்சின் அதிகாரியொருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவை இவ்வாறிருக்க, இலங்கையை முதலீட்டு வலயமாக அறிவிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஆகவே இந்நாட்டைப் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதற்கு இந்த வேலைத்திட்டங்கள் பாரிய பங்களிப்புக்களை நல்கும். அதன் ஊடாக நாட்டில் கிட்டிய எதிர்காலத்தில் பொருளாதார மறுமலர்ச்சி ஏற்படும். அது தொடர்பில் பாரிய நம்பிக்கைகளும் ஏற்பட்டுள்ளன. அதுவே நாட்டினதும் மக்களினதும் எதிர்பார்ப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# மனிதாபிமானத்தின் முன்னுதாரண புருஷர் பாலித்த தெவரப்பெரும



*பாலித்த தெவரப்பெரும அகால மரணமடைந்த செய்தி முழு நாட்டையுமே சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. பாலித்த தெவரப்பெரும முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், பிரதி அமைச்சர். இவை எல்லாவற்றையும் விட மனிதாபிமானம் மிக்க மனிதர்.*

*1960 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதி பிறந்த அவர், ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து 2002 ஆம் ஆண்டில் நடைபெற்ற மத்துகம உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட்டார். அத்தேர்தலில் பாலித்த தெவரப்பெரும உள்ளிட்ட அணியினர் 17,575 விருப்பு வாக்குகளை பெற்றுக் கொண்டார்கள். அதன் மூலமே அவர் மத்துகம பிரதேச சபையின் தலைவர் பதவியை பெற்றுக் கொண்டார்.*

*2015 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதி அமைச்சர் பதவியையும் வகித்தார். பதவிகள் பலவற்றை வகித்தாலும் அவர் எப்போதுமே இனிமையான மனிதராகவே வாழ்ந்தவர். தைரியம் மிக்கவர், நீதிக்காக போராடியவர்.*

*2016 ஜூலை மாதம் பாடசாலை அனுமதி கிடைக்காத ஒன்பது பிள்ளைகளுக்காக போராடியவர்.*

*அவரது வேண்டுகோள் நிராகரிக்கப் பட்டதால் கழுத்தில் கயிறை மாட்டி தற்கொலைக்கு முயற்சி செய்தார். அவரது உயிர் காப்பாற்றப்பட்டது கழுத்தில் செய்யப்பட்ட சத்திர சிகிச்சையின் பின்னராகும்.*

*அவரது போராட்டம் வெற்றி பெற்றது, பாடசாலைக் கதவுகள் அம்மாணவர்களுக்காக திறக்கப்பட்டன.*

*அட்டுலுகம, முஸ்லிம்கள் அதிகமாக வசிக்கும் கிராமமாகும். 2020 ஆம் ஆண்டு கொவிட் தொற்றால் முழு நாடுமே பீதியில் உறைந்து போயிருந்தது. அனைவரும் வீட்டை விட்டு வெளியேறாமல் வீட்டிலேயே தங்கி இருந்த காலமது. ஆனால் பாலித்த தெவரப்பெரும அதிசயமான ஒரு வேலையை செய்தார். கொவிட் தொற்று விதிமுறைகளை மீறி உணவுப் பொதிகளை எடுத்துச் சென்று அம்மக்களுக்கு விநியோகித்தது உயிரை விட மனிதாபிமானம் சிறந்தது என்பதை எடுத்துக்காட்டினார்.*

*பாலித்த தெவரப்பெரும மரணத்துக்கு முன்னரே மரணத்திற்காக தயாரான மனிதர். அது அவரின் இந்தக் குறிப்பின் மூலம் தெரியவருகின்றது.*

*"நான் எனது இறுதி யாத்திரைக்கு அனைத்தையும் தயார் செய்துள்ளேன். எங்கள் மத வழக்கப்படி இறப்பதற்கு முன்னரே கிரியைகளை செய்ய முடியும். எனது இறுதி ஊர்வலத்துக்கான பெட்டியையும் தயாரித்துள்ளேன். எனது இறுதி ஊர்வலத்தில் பெட்டியின் பின்னால் யாரும் அழுதுகொண்டு வர வேண்டாம்."*

*இவ்வாறு அவர் அந்தக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.*

*பாலித்த தெவரப்பெரும என்னும் மனிதர் மரணித்து விட்டார். அவர் மரணம் அடைந்த பின்னர் அவரை நேசித்தவர்கள், அவருக்கு எதிரானவர்கள் அனைவரும் அவரது நற்குணத்தையே பாராட்டுகின்றார்கள். மரணத்தின் பின்னர் நல்ல சொற்களை கேட்பதற்கு நல்லதையே செய்திருக்க வேண்டும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக!*

# மனிதநேயப்பணியை வாழ்வின் இலட்சியமாக கொண்டு வாழ்ந்தவர் கலாநிதி ஏ.ரி.ஆரியரத்ன



*சர்வோதய அமைப்பின் ஸ்தாபகரும் அதன் தலைவருமான கலாநிதி ஏ.ரி. ஆரியரத்ன காலமான செய்தி அவரது அபிமானிகளுக்கு அதிர்ச்சியையும் துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. கலாநிதி ஆரியரத்ன உடல்நலக்குறைவு காரணமாக தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 16 ஆம் திகதி காலமானார்.*

*சர்வோதய இயக்கமானது அனைவருக்கும் விழிப்புணர்வூட்டும் பொருட்டு 'உழைப்பு, சிந்தனை மற்றும் ஆற்றலைப் பகிர்தல்' எனும் எண்ணக்கருவினை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வருகின்றது. சர்வோதய அமைப்பு 1958 ஆம் ஆண்டு முதல் இலங்கை முழுவதும் பல வருடங்களாக மனிதநேயப் பணியில் ஈடுபட்டு வருகின்றது.*

*1931 ஆம் ஆண்டு காலி மாவட்டத்தின் உனவடுன பிரதேசத்தில் பிறந்த கலாநிதி ஆரியரத்ன தனது ஆரம்பக் கல்வியை கிராமிய பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை காலி மஹிந்த கல்லூரியிலும், உயர்கல்வியை வித்தியோதயா பல்கலைக்கழகத்திலும் கற்றார். கொழும்பு நாலந்தா கல்லூரியில் தனது ஆசிரியப் பணியைத் தொடங்கிய அவர், அங்கு ஆசிரியராக பணியாற்றிய போது நாற்பது உயர்நிலை மாணவர்களையும் பன்னிரண்டு ஆசிரியர்களையும் அழைத்துக் கொண்டு பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழும் ஒரு கிராமத்திற்குச் கல்விச் ற்றுலா சென்றார். அக்கிராமத்தில் முதலாவது சிரமதானப் பணியை அவர் மேற்கொண்டார்.*

*ஆரம்பத்திலிருந்தே அவர் சர்வோதய சிரமதான இயக்கத்தை நிலைபேறான அபிவிருத்தி மற்றும் அமைதிக்கான புத்தர் பெருமானின் போதனைகளை செயற்படுத்தும் இயக்கமாக அடையாளப்படுத்தினார்.*

*அவர் தனது சகாக்களுடன் இணைந்து புத்தர் பெருமானின் போதனைகளின் அடிப்படையில் ஆறு நிலைகளில் சர்வோதய இயக்கத்தை விழிப்புணர்வூட்டுவதற்கு கோட்பாட்டினையும் நடைமுறையையும் உருவாக்கினார்.*

*அறுபத்து மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக, சர்வோதயம் இலங்கையின் மிகப்பெரிய அரச சார்பற்ற இயக்கமாக தனது சேவையைத் முன்னெடுத்து வருவதுடன், தேசத்திற்கும் அதன் மக்களுக்கும் அவர் ஆற்றிய அர்ப்பணிப்பை அங்கீகரிக்கும் வகையில் கலாநிதி ஆரியரத்ன அவர்கள் பல தேசிய மற்றும் சர்வதேச விருதுகள் வழங்கி கௌரவிக்கப் பட்டுள்ளார்.*

*அவர் 2007 இல் இலங்கை ஜனாதிபதியிடமிருந்து மிக உயரிய தேசிய விருதான ஸ்ரீலங்காபிமானய விருதைப் பெற்றதுடன் மனித நல்வாழ்வு மற்றும் அமைதிக்கான அவரது பங்களிப்பிற்காக ரமோன் மெக்சேசே விருது (பிலிப்பைன்ஸ்) 1969, சர்வதேச அபிவிருத்திக்கான கிங் பவுடோயின் விருது (பெல்ஜியம்) 1982, நிவானோ பீஸ் பிரைஸ் (யப்பான்) 1992, மகாத்மா காந்தி அமைதி பரிசு (இந்தியா) 1996 போன்ற பல சர்வதேச விருதுகளைப் பெற்றார்.*

*மேலும் கலாநிதி ஆரியரத்ன ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் (D.Litt.) பட்டமும், பிலிப்பைன்ஸில் உள்ள Amelio Aguinaldo மருத்துவக் கல்லூரியின் மானுடவியல் கலாநிதி (D.H.) பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.*

*அமரர் ஆரியரத்ன இலங்கை அரசியலிலும் சமூக அபிவிருத்தியிலும் தொடர்ச்சியான செயற்பாட்டாளராக அறியப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.*

**எஸ். சாரங்கன்...**

# யாழ் பல்கலைக்கழக பொன்விழாவை முன்னிட்டு சர்வதேச கல்வியியல் ஆய்வுமாநாடு நாளை ஆரம்பம்




*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 'யாழ்ப்பாண வளாகம்' எனும் பெயரில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஒரு அங்கமாக ஆரம்பிக்கப்பட்டு இவ்வருடத்துடன் ஐம்பதாண்டைப் பூர்த்தி செய்து பொன்விழா காண்கின்றது. இலங்கைத் தமிழர்களின் அறிவுக் கருவூலமாகத் திகழும் யாழ் பல்கலைக்கழகம் தமிழ்ச் சமூகத்தின் இருப்புக்கும் வளர்ச்சிக்கும் ஆற்றிய பங்களிப்புகள் ஏராளம். அந்த வகையில் ஐம்பதாவது ஆண்டு நிறைவிலும் அது புதிய பல பரிமாணங்களை பிரசவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.*

*இந்தவகையில், முதலாவது சர்வதேச கல்வியியல் ஆய்வுமாநாட்டை யாழ் பல்கலைக்கழகத்தின் உயர்பட்டப்படிப்புக்கள் பீடமும் கலைப்பீடத்தைச் சேர்ந்த கல்வியியல் துறையும் இணைந்து ஒழுங்கமைத்துள்ளன.*

*'நாளையை வலுப்படுத்தல் கல்வியின் போக்குகளும் அவற்றை புரிந்து கொள்ளவும் உள்வாங்கவும் வடக்கு மாகாணத்தின் இயலுமைகள்' எனும் கருப்பொருளில் இம்மாநாடு திட்டமிடப்பட்டுள்ளது. யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா தலைமையிலும் உயர்பட்டப்படிப்புக்கள் பீடப் பீடாதிபதி பேராசிரியர். செ.கண்ணதாசன் மற்றும் கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் ஆகியோரின் இணைத்தலைமையிலும் இந்த ஆய்வு மாநாடு அரங்கேறவுள்ளது. கல்வியியல் துறைத் தலைவர் கலாநிதி.ஆ.நித்திலவர்ணண் மாநாட்டின் இணைப்பாளராகச் செயற்படுகின்றார். வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிரஞ்சன் மற்றும் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ் ஆகியோர் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தாளர்களாகக் கலந்து கொள்கின்றனர்.*

*நாளை 20 ஆம் திகதி சனிக்கிழமையும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் காலை மற்றும் மாலை அமர்வுகள் எனத் திட்டமிடப்பட்டுள்ள இம்மாநாட்டின் காலை அமர்வுகள் கைலாசபதி கலையரங்கிலும் மாலை அமர்வுகள் உயர்பட்டப்படிப்புக்கள் பீடத்திலும் நடைபெறவுள்ளன.*

*சனிக்கிழமை நடைபெறவுள்ள அங்குரார்ப்பண நிகழ்வில் திறவுகோல் உரையினை கொழும்பு பல்கலைக்கழக கல்வியியல்பீட கல்வி உளவியல் இருக்கைப் பேராசிரியர் திருமதி மஞ்சுளா விதாணபத்திரண நிகழ்த்தவுள்ளார். 'வாண்மைத்துவ விருத்திக்கான ஆய்வு மைய புத்தாக்கங்கள்: வடக்கு இலங்கையின் ஆசிரியர் கல்விக்கான தந்திரோபாய அணுகுமுறை' எனும் தலைப்பில் இந்த உரை நிகழவிருக்கின்றது.*

*திறவுகோல் உரையினைத் தொடர்ந்து மாநாட்டின் கருப்பொருளை மையப்படுத்திய மையக்கருத்துரைகள் இடம் பெறவுள்ளன. இக்கருத்தரங்கிற்கு உயர்பட்டப்படிப்புக்கள்பீடப் பீடாதிபதி பேராசிரியர் செ.கண்ணதாசன் தலைமை தாங்கவுள்ளார்.*

*'இலங்கையின் ஆரம்ப பிள்ளைப்பருவக் கல்வியை முறைமைப்படுத்தல் சவால்களும் பிரச்சினைகளும்' எனும் தலைப்பில் திறந்த பல்கலைக்கழக கல்வியியல்பீடப் பேராசிரியர் தி.முகுந்தனும், 'வட மாகாணக் கல்வியின் சமகால உள சமூக நிலைமைகள்' எனும் தலைப்பில் உளமருத்துவநிபுணர் சி.சிவதாசும், 'இலங்கையின் பாடசாலைக் கலைத்திட்டத்தின் சவால்களும் புதிய போக்குகளும்' எனும் தலைப்பில் திறந்த பல்கலைக்கழக கல்வியியல்பீடப் பேராசிரியர் எவ்.எம்.நவாஸ்தீனும், 'சட்டத் தீர்மானங்களை அறிவிப்பதில் கல்வியியல் ஆய்வுகளின் தேவைகள்' எனும் தலைப்பில் களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்ற நீதிபதி ஜே.பி.ஏ.ரஞ்சித்குமாரும் உரையாற்றவுள்ளனர்.*

*ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள இரண்டாம் நாள் நிகழ்வுகளுக்கு யாழ் பல்கலைக்கழக கல்வியியல்துறைப் பேராசிரியர் திருமதி.ஜெயலக்சுமி இராசநாயகம் தலைமை தாங்கவுள்ளார். இந் நிகழ்வில் திறவுகோல் உரையை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக கல்வியியல் மற்றும் மேலாண்மைத் துறைத் தலைவர் பேராசிரியர் கு.சின்னப்பன் 'தமிழ் கற்பித்தலில் புதிய போக்குகள்' எனும் தலைப்பில் நிகழ்த்தவுள்ளார்.*

*அதனைத் தொடர்ந்து 'நாளையை வலுப்படுத்தல் கல்வியின் போக்குகளும் அவற்றை புரிந்துகொள்ளவும் உள்வாங்கவும் வட மாகாணத்தின் இயலுமைகள்' எனும் தலைப்பில் கலைப் பீடப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் தலைமையில் திறந்த புலமைத்துவக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் ஓய்வுபெற்ற வலயக் கல்விப்பணிப்பாளரும் அதிபருமாகிய என்.தெய்வேந்திரராஜா, கல்வியியல் ஆய்வாளரும் அகவிழி மற்றும் ஆசிரியம் சஞ்சிகைகளின் ஆசிரியருமான தெ.மதுசூதனன், தேசிய கல்வி நிறுவன விரிவுரையாளர் ஐ.கைலாசபதி, கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலய அதிபர் திருமதி ஜெயா மாணிக்கவாசகர், இலங்கை பரீட்சைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி.எம்.ஜீவராணி புனிதா, யாழ் இந்துக் கல்லூரி அதிபர் இ.செந்தில் மாறன், யாழ் பல்கலைக்கழகக் கல்லூரியின் முன்னாள் பணிப்பாளரும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் திட்ட முகாமையாளருமாகிய ஜே. ஜூட் வோல்ற்றன் மற்றும் கிளிநொச்சி வடக்கு கல்வி வலய தொழில் வழிகாட்டல் அலுவலர் சு.வீரசுதாகரன் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.*

*'வடக்கு மாகாணப் பாடசாலைகளின் வெற்றிகளும் பின்னடைவுகளும்', 'பாடசாலைகளும் சமூகமும் எங்கு நாம் நிற்கின்றோம் முன்னோக்கிப் போவதற்கான வழிகள்', 'எதிர்பார்க்கப்படும் கற்றல் பேறுகளை அளவிடுதல்', மற்றும் 'கல்வியும் வேலைவாய்ப்பும் சந்தர்ப்பங்களும் சவால்களும்' எனும் தலைப்புக்களில் கலந்துரையாடல் கட்டமைக்கப்பட்டுள்ளது. கலந்துரையாடலின் கருத்துச்செறிவுகளை மாநாடு நிறைவுபெற்ற பின்னர் கொள்கை ஆவணமாக வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.*

*இரண்டு நாட்களும் மாலை அமர்வுகள் பலாலி வீதியில் அமைந்துள்ள உயர்பட்டப்படிப்புக்கள் பீடத்தில் நடைபெறும். இரண்டு நாள் மாலை அமர்வுகளிலும் தலா 44 ஆய்வுக் கட்டுரைகள் பல்வேறு தலைப்புக்களிலும் சமர்ப்பிக்கப்படவுள்ளன. பல்கலைக்கழகங்களின் ஆய்வு மாணவர்கள், விரிவுரையாளர்கள், கல்வியியல் கல்லூரிகள் மற்றும் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரியக் கல்வியலாளர்கள், கல்வி நிர்வாகிகள், பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் என பன்முகப்படுத்தப்பட்ட ஆய்வாளர்களினால் பல்வேறு தலைப்புக்களில் ஆய்வுக் கட்டுரைகள் முன்வைக்கப்படவுள்ளன.*

# ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# ரமழான் கற்றுத்தந்த பொறுமை

அல்லாஹ்வின் விருந்தாளியாக எம்மை நோக்கி வந்த ரமழான் எமக்கு பல பயிற்சிகளையும், வரப்பிரசாதங்களையும், வாய்ப்புகளையும் வாரி வழங்கிவிட்டு எம்மை விட்டு பிரிந்து சென்று விட்டது. நிச்சயமாக அது நம் பற்றிய சாட்சியங்களை அல்லாஹ்விடம் பதிவு செய்திருக்கும். அதனை நாம் எவ்வாறு பயன்படுத்தினோம்? அது கொண்டு வந்த அருட்பாக்கியங்களில் எதனை நாம் பெற்றுக் கொண்டோம்? அது எமக்கு கற்றுத் தந்த பாடங்களில் எதனை எடுத்துக் கொண்டோம்? என்பன போன்ற பல கேள்விகளை மையப்படுத்தியதாக அந்த சாட்சியம் அமையும்.

ரமழான் கற்றுத்தந்த பாடங்களில் உன்னதமான ஒரு பாடம் பொறுமை. மனிதனுக்கு பொறுமை எனும் உயர் பண்பை கற்றுக் கொடுப்பதில் ரமழான் அளப்பரிய பங்கினை வகிக்கின்றது. இதனால்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் ரமழான் பொறுமையின் மாதம் என அடையாளப்படுத்தப் பட்டுள்ளது. எனவே ரமழான் எமக்கு கற்றுத் தந்த பொறுமை எனும் பாடத்தை ரமழான் மாதத்தில் மட்டுமன்றி இதர காலங்களிலும் கடைப்பிடிப்பது கட்டாயமானதாகும். குறிப்பாக, நாம் வாழும் இன்றைய வேகமான உலகில் இதன் தேவை வெகுவாக உணரப்படுவதை எவராலும் மறுக்க முடியாது.



பொறுமை ஓர் உலகளாவிய தேவை என்பதை இன்றைய உலகின் செயற்பாடுகள் நிரூபித்துக் கொண்டிருக்கின்றன. பொறுமை இழந்த மனிதர்களின் செயற்பாடுகள் இவ்வுலகையே அழித்துக் கொண்டிருப்பதை கண்ணூடாக நாம் கண்டு கொண்டிருக்கிறோம். அதனால் பொறுமையின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் உணர்ந்து செயற்பட வேண்டும். அது ஈருலகிலும் விமோசனம் பெற்றிட வழிவகுக்கக் கூடியதாகும்.

பொறுமை என்பது நற்பண்புகளின் தாய் என வர்ணிக்கப்படும் ஒரு மகத்தான பண்பு. இஸ்லாத்தின் அடிப்படையே பொறுமைதான். ஒரு மனிதன் நன்மைகளையும், நற்கருமங்களையும் செய்வதற்கும், பாவங்களிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்வதற்கும், சோதனைகள், துன்பங்கள் வரும்போது முறையாக அவைகளை எதிர்கொண்டு, வாழ்வில் சமநிலையோடு பயணிப்பதற்கும் தேவையான அடிப்படைப் பண்பே பொறுமைதான். பொறுமை என்பது மனித பண்பு மட்டும் அல்ல, அது இந்த பேரண்டத்தின் பண்பு. ஒரு பயிர் எவ்வாறு வளர்கின்றது? இன்று விதை விதைத்து நாளை அறுவடை செய்ய முடியாது. தாயின் கருவறையில் இருக்கும் குழந்தை, அது வெளிவர பத்து மாதங்கள் தேவைப்படுகின்றன. இன்று உருவாகி நாளையே அது வெளிவருவதில்லை. அப்படி வந்தால் அதன் நிலை எவ்வாறிருக்கும் என்பது தெளிவானது. உலகமே பொறுமையுடன்தான் இயங்குகின்றது.

பொறுமை என்றால் 'மனதை கட்டுப்படுத்தல்' என்றே பொருள் கொள்ளப்படுகின்றது. மனக்கட்டுப்பாடின்றி வாழும் மனிதனின் வாழ்வு மடிந்து போய்விடும். பொறுமை இழந்த மனிதன் ஒட்டுமொத்த வாழ்வையும் இழந்து விடுவான். இதனால்தான் இஸ்லாம் பொறுமை எனும் உயர் பண்பிற்கு ஆழ்ந்த முக்கியத்துவத்தை கொடுத்திருக்கின்றது. அல்குர்ஆனில் 90க்கும் அதிகமான இடங்களில் பொறுமை குறித்து கூறப்படுகிறது. வேறு எந்த நற்பண்பு குறித்தும் இந்த அளவு அதிகமாக கூறப்படவில்லை.

### பொறுமையின் வகைகள்

(1) பாவங்களில் இருந்து ஒரு மனிதன் தன்னை பாதுகாத்துக் கொள்வதற்காக செய்யும் பொறுமை. உதாரணமாக, ஒரு மனிதன் விபசாரத்தில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு கிட்டும் பொழுது அல்லாஹ்வைப் பயந்து, தன்னை கட்டுப்படுத்தி, அதிலிருந்து ஒதுங்கிக் கொள்வதற்காக தேவைப்படுவது பொறுமையே.

(2) அல்லாஹ்வை வணங்கி வழிபடுவதற்கும், அவனுக்கு விருப்பமான கருமங்களை செய்வதற்கும் ஒரு மனிதனுக்கு தேவைப்படும் பொறுமை. உதாரணம், உறக்கத்தில் இருக்கின்ற ஒரு மனிதன் அவ்வின்பமான உறக்கத்தை முறித்துக் கொண்டு, தொழுகைக்கு செல்வதற்கு தேவைப்படுவது பொறுமைதான்.

(3) சோதனைகள், துன்பங்கள், இடர்கள் ஏற்படும் போது அவைகளை எதிர்கொள்ள தேவைப்படும் பொறுமை. இவைகளை பொறுமையுடன் எதிர்கொள்ள தைரியமற்ற மனிதன் தற்கொலை வரை சென்று விடுவதை நாம் காண்கிறோம். எனவே பொறுமை எனும் இவ்வுயரிய பண்பு மிக விசாலமாகவும் ஆழமாகவும் நோக்கப்பட வேண்டியது என்பதை மேற்குறிப்பிடப்பட்ட வகைகளின் ஊடாக புரிந்து கொள்ளலாம்.

இவ்வுயரிய பண்பை தன்னகத்தே அணிந்து கொள்கின்ற மனிதன் இறைவன் புறத்திலிருந்து பல வழிகளிலும் ஆசீர்வதிக்கப்படுகின்றான். குறிப்பாக ஒரு பொறுமையாளன் மூன்று வகையான பரிசில்களை பெற்றுக் கொள்கின்றான்.

(1) அல்லாஹ் உடன் இருத்தல் என்னும் வெகுமானத்தைப் பெற்றுக் கொள்கிறான். இதனை அல்லாஹுத்தஆலா இவ்வாறு குறிப்பிடுகின்றான். 'நிச்சயமாக இறைவன் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்'
(அல்குர்ஆன் 2:153)

(2) அளவின்றி கூலிகளை பெற்றுக்கொள்ளல் என்னும் பரிசும் வழங்கப்படுகின்றது. இது பற்றி திருக்குர்ஆன் இவ்வாறு இயம்புகின்றது 'பொறுமையாளர்களுக்கு அவர்களின் கூலி அளவின்றி வழங்கப்படும்'.
(அல்குர்ஆன் 39:10.)

(3) இறைவனின் நேசம் அவர்களுக்கு கிட்டுகின்றது. இது பற்றி அல்லாஹ் இவ்வாறு குறிப்பிடுகின்றான், 'பொறுமையாளர்களையே அல்லாஹ் நேசிக்கின்றான்'
(அல்குர்ஆன் 3:146)

பொறுமையாளர்கள் பற்றியும், பொறுமையாளர்களுக்கு கிடைத்த வெற்றிகள் பற்றியும் புனித குர்ஆன் பல இடங்களில் குறிப்பிடுகின்றது. அந்த வகையில் நபி நூஹ் (அலை) அவர்கள் குறித்து கூறும் போது, அவர் 950 ஆண்டுகள் வாழ்ந்த வாழ்க்கையை ஹூத் என்னும் அத்தியாயத்தில் அல்லாஹ் விவரிக்கின்றான். அனைத்தையும் கூறிய பின் இறைவன் இவ்வாறு உபதேசிக்கின்றான்.

'எனவே பொறுமையை மேற்கொள்வீராக' (அல்குர்ஆன் 11:49) 950 ஆண்டுகால வாழ்வின் வரலாற்றுக் கதையின் சுருக்கம். பொறுமையை மேற்கொள்வீராக என்பது என்றால் பொறுமை என்பது எவ்வளவு முக்கியமானது என மிக எளிதாக புரிந்து கொள்ளலாம்.

பொறுமையின் முக்கியத்துவத்தை பின்வரும் நபிமொழி மூலம் நபி (ஸல்) அவர்கள் உணர்த்துகிறார்கள். பொறுமையை விட சிறந்த விரிவான எந்த ஒரு அருளும் எவருக்கும் கொடுக்கப்படவில்லை'.
(ஆதாரம்: புஹாரி).

இவ்வுலக வாழ்வை சமநிலையோடும், மகிழ்ச்சியோடும் கழிப்பதற்கான அச்சாணியாகவும், அருளாகவும் நபி (ஸல்) அவர்கள் பொறுமையை அடையாளப்படுத்தி உள்ளார்கள். தனது வாழ்க்கையில் சந்தித்த ஒவ்வொரு சவால்களையும், சோதனைகளையும் பொறுமையோடும் சகிப்புத்தன்மையோடும் சந்தித்து பல சாதனைகளையும், வெற்றிகளையும் நிலைநாட்டியதற்கான பல செழுமையான முன்னுதாரணங்களை எமக்காக விட்டுச் சென்றுள்ளார்கள்.

எனவே நாம் அவைகளில் இருந்து பாடங்களை பெற்று வாழ வல்ல அல்லாஹ் துணை புரியட்டும்.

கலாநிதி, அல்ஹாபிழ்
எம்.ஐ.எம். சித்தீக்...
(அல்ஈன்ஆமி)
B.A.Hons, (Al Azhar university, Egypt) M.A.& PhD (International Islamic university, Malaysia)

# பயங்கரம் உணரப்படாதுள்ள செயல்!

இன்றைய நவீன யுகத்தில் தகவல் தொடர்பு சாதனங்களால் உண்மையை விட உண்மைக்கு புறம்பான வதந்திகள்தான் அதிகம் பரப்படுகிறது. ஆனால் அல் குர்ஆனினதும் நபி (ஸல்) அவர்களதும் அறிவுரை வதந்திகளை நம்பாமலும் பரப்பாமலும் வாழ்வதாகும்.



இது தொடர்பில் அல் குர்ஆன், 'முஃமின்களே...! (சந்தேகமான) பல எண்ணங்களிலிருந்து விலகிக்கொள்ளுங்கள். ஏனெனில், நிச்சயமாக எண்ணங்களில் சில பாவங்களாக இருக்கும். (பிறர் குறைகளை) நீங்கள் துருவித்துருவி ஆராய்ந்து கொண்டிராதீர்கள். அன்றியும் உங்களில் சிலர் சிலரைப் பற்றி புறம் பேச வேண்டாம்' (49:12) என்று குறிப்பிட்டுள்ளது.

இறைவன் இங்கே மூன்று விதமான அம்சங்களை பட்டியல் இட்டிருக்கிறான். அவை ஊகம், துருவித்துருவி ஆராய்தல், புறம் பேசுதல் ஆகியனவாகும். இவற்றின் மூலம் நன்மைகளை விடவும் பாவமே மிகைத்து நிற்கும். இம்மூன்றுமே ஒன்று மற்றொன்றுடன் தொடர்புடையவையாகும்.

ஊகம் என்பது உறுதிப்படுத்தாத வதந்தியாகும். வதந்தியை துருவித்துருவி ஆராயும்போது பிறர் மீது புறம் பேசக்கூடிய நிலைக்கு தள்ளிவிடும். வதந்தியால் பரவக்கூடிய செய்தியால் நன்மையை விட தீங்குகளே அதிகம். அதனால் வதந்தியை பாவங்களின் பட்டியலில் சேர்த்துவிட்டு அதிலிருந்து முஸ்லிம்கள் முற்றாக விலகி நிற்க வேண்டும் என இஸ்லாம் குறிப்பிட்டிருக்கிறது.

'முஃமின்களே! தீயவன் எவனும் உங்களிடம் ஒரு செய்தியைக் கொண்டு வந்தால் அதைத் தீர்க்க விசாரித்துக் கொள்ளுங்கள். (இல்லையேல்) அறியாமையினால் (குற்றமற்ற) ஒரு சமூகத்தாருக்கு நீங்கள் தீங்கு செய்து விடலாம். பின்னர் நீங்கள் செய்தவை பற்றி நீங்களே கைசேதப்படுபவர்களாக (கவலைப்படுபவர்களாக) ஆவீர்கள்'
(அல் குர்ஆன் 49:6)

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் ஸக்காத் நிதியை வசூலிப்பதற்கு வலீத் பின் உக்பா (ரழி) அவர்களை பனீமுஸ்தலிக் எனும் கோத்திரத்தாரிடம் அனுப்பி வைத்தார்கள். இவருக்கும் அந்த கோத்திரத்தாருக்கும் இஸ்லாத்திற்கு வரும் முன் ஒரு கொலை சம்பந்தமான பகை உணர்வு இருந்து வந்தது. இஸ்லாத்திற்கு வந்தபின் அந்த பகை மறைந்து போனது. வலீத் பின் உக்பா (ரழி) அவர்கள் வருகை தரும் செய்தியறிந்து, அந்த கோத்திரத்தார் அவரை வரவேற்பதற்காக பெரும் படையை திரட்டி புடைசூழ ஊரின் எல்லையில் குழுமியிருந்தார்கள். இதை கண்ட வலீத் பின் உக்பா (ரழி) அவர்கள் உண்மை என்னவென்று உறுதிப்படுத்தாமல் பழைய பகை உணர்வை மனதில் வைத்து நம்மை தீர்த்து கட்ட இவர்கள் ஒன்று குழுமியிருக்கிறார்கள் என மனதில் நினைத்துக்கொண்டு, வந்த வழியை நோக்கி நபி (ஸல்) அவர்களிடம் திரும்பி விட்டார்கள்.

அத்தோடு அந்த கோத்திரத்தார் குறித்து தம் எண்ண அடிப்படையில், 'அவர்கள் இஸ்லாத்திலிருந்து வெளியேறி விட்டார்கள், ஸக்காத் நிதியை தர மறுக்கிறார்கள், என்னை கொலை செய்யவும் தயாராகி விட்டார்கள்' என்றெல்லாம் கூறிவிட்டார்கள். ஆனால் நபி (ஸல்) அவர்கள் இக்கூற்றுக்களைக் கேள்விப்பட்டதும் அவற்றை நம்பவில்லை. நடந்தது உண்மையா? அல்லது வதந்தியா? என்பதை ஆராய்வதற்காக காலித் பின் வலீத் (ரழி) அவர்களின் தலைமையில் ஒரு சிறிய படையை அனுப்பி வைத்து, அவர்களுக்கு தெரியாமல் இரவு நேரத்தில் அந்த ஊருக்குள் நுழையும்படி ஆலோசனை வழங்கினார்கள்.

அந்த ஊரின் எல்லை அருகே படை வந்ததும், காலித் (ரழி) அவர்கள் சில ஒற்றர்களை உளவு பார்க்க அனுப்பி வைத்தார்கள். அந்த நேரம் மஃரிப் தொழுகை நேரமாகும். ஒற்றர்கள் சென்றபோது அந்த கோத்திரத்தார் தொழுகையில் ஆர்வமாக ஈடுபட்டதை கண்டார்கள்.

இதனை அறிந்து கொண்ட காலித் (ரழி) அவர்கள் அடுத்த நாள் காலையில் அவர்களிடம் சென்று ஸக்காத் நிதியை வசூலித்துக் கொண்டு, நபி (ஸல்) அவர்களிடம் திரும்பிச் சென்று நடந்த உண்மை நிலவரத்தை எடுத்துக்கூறினார்கள். அந்த சமயம்தான் மேற்கூறப்பட்ட அல் குர்ஆன் (49:6) இறைவசனம் இறங்கியது. அப்போது நபி (ஸல்) அவர்கள் 'நிதானம் இறைவனின் செயல். அவசரம் ஷைத்தானின் செயல்' என்றார்கள்.

மேற்கூறப்பட்ட சம்பவத்தில் நபி (ஸல்) அவர்கள் அவசரப்படாமல் நிதானமாக சமயோசிதமாக நடந்து கொண்டதினால் ஒரு பெரும் போர் தவிர்க்கப்பட்டது. அந்த நபித்தோழரின் வதந்தியை நம்பி, நபி (ஸல்) அவர்கள் செயல்பட்டிருந்தால் ஒரு சமூகத்தாருக்கு அநீதி இழைத்தவர்களாக ஆகியிருப்பார்கள்.

அதனால் கண்டதை எல்லாம் பேசுவது வதந்தியின் ஆரம்ப நிலையாக அமைந்து விடுகிறது. நாம் பேசக்கூடிய ஒவ்வொன்றுக்கும் நாமே பொறுப்பு. வதந்தியால் ஏற்படக்கூடிய அனைத்து விதமான அசம்பாவிதங்களுக்கும் அதனை பரப்பியவர் மீதே சாரும்.

'எதைப் பற்றி உமக்கு (த்தீர்க்க) ஞானமில்லையோ அதை(ச் செய்யத்) தொடர வேண்டாம். நிச்சயமாக (மறுமையில்) செவிப்புலனும், பார்வையும், இருதயமும் இவை யாவுமே (அதனதன் செயல் பற்றி) கேள்வி கேட்கப்படும்'
(அல் குர்ஆன் 17:36)

'தான் கேட்பதையெல்லாம் ஒருவன் பரப்புரை செய்வது அவன் பொய்யன் என்பதற்கு இதுவே போதுமானது' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: முஸ்லிம்).

'தான் கேட்பதையெல்லாம் பரப்புரை செய்பவன் பரிபூரண முஸ்லிமாக முடியாது. மேலும் அவன் ஒரு போதும் தலைமைத்துவத்திற்கு தகுதியும் பெற முடியாது'
(ஆதாரம்: பைஹகீ)

ஒரு தடவை உமர் (ரலி) அவர்கள் கூறும்போது 'உங்களையும், குழப்பத்தையும் நான் எச்சரிக்கை செய்கின்றேன். ஏனெனில், வாளால் ஏற்படும் அதே பாதிப்பு நாவினாலும் ஏற்படலாம்' என்றார்கள்.

ஆகவே எந்தவொரு தகவலையும் செய்தியையும் தீர விசாரித்தறியாமல் பலவிதமான பாதிப்புக்களுக்கும் வழி வகுக்கும். வதந்தியால் பலரின் வாழ்க்கை பாழாகி போயிருக்கிறது. இன்றைய நவீன காலத்தில் தகவல் பரப்பும் சாதனங்களால் உண்மையை விட உண்மைக்கு புறம்பான வதந்திகள்தான் அதிகம் பரப்புரை செய்யப்படுகிறது. இதனால் கலவரம் கூட ஏற்படுகிறது. வதந்திகளை நம்பாமலும் பரப்பாமலும் வாழ்வதே அண்ணலாரின் அறிவுரையாகும்.

அப்துல்லாஹ்...

# இஸ்லாத்தின் பார்வையில் பெண்

இறைவனின் படைப்பில் ஆண், பெண் என பாலின வேறுபாடுகள் இல்லை. அவன் பார்வையில் அனைவரும் சமம். இஸ்லாமும் இவர்களை ஒரே கண் கொண்டு தான் பார்க்கிறது.

'மனிதர்களே! நீங்கள் உங்கள் இறைவனுக்குப் பயந்து (நடந்து) கொள்ளுங்கள். அவன் உங்கள் அனைவரையும் ஒரே ஆன்மாவில் இருந்து உற்பத்தி செய்தான். (ஆரம்பத்தில் அந்த ஒருவரை படைத்து) அவரிலிருந்து அவருடைய மனைவியைப் படைத்தான். பின்பு அவ்விருவரிலிருந்து ஆண்கள், பெண்கள் என பலரை (இப்பூமியில்) பரப்பினான். ஆகவே, (அத்தகைய) அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்து (நடந்து) கொள்ளுங்கள். அவனைக் கொண்டே நீங்கள் (உங்களுக்குள் ஒருவருக்கொருவர் வேண்டியவற்றைக்) கேட்டுக் கொள்கின்றீர்கள். இன்னும் (அல்லாஹ்வுக்குப் பயந்து) இரத்தக் கலப்பு உறவினர்களிடமும் அன்பாக நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கவனித்தவனாகவே இருக்கின்றான்'. (திருக்குர்ஆன் 4:1)



'மனிதர்களே! உங்கள் அனைவரையும் நிச்சயமாக நாம் ஒரே ஆண், ஒரே பெண்ணிலிருந்துதான் படைத்தோம். பின்னர், ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ளும் பொருட்டு, உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆதலால், உங்களில் ஒருவர் மற்றவரைவிட மேலென்று பெருமை பாராட்டிக் கொள்வதற்கில்லை.) எனினும், உங்களில் எவர் இறையச்சம் உடையவராக இருக்கின்றாரோ, அவர் தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் (அனைத்தையும்) நன்கறிந்தவனும் நன்கு தெரிந்தவனாகவும் இருக்கின்றான்'. (திருக்குர்ஆன் 49:13)

இந்த இரு வசனங்களும் மனிதப்படைப்பின் ஆரம்ப நிலையை அழகாக சுட்டிக்காட்டுகின்றன. கூடவே பெண்ணின்றி ஆணும் இல்லை, அகிலமும் இல்லை என்றறிய முடிகிறது. ஆணை விட சற்று தாழ்ந்தவள் பெண் என்று இஸ்லாம் எங்குமே சொல்லவில்லை. இருவரையும் சமப்படுத்தித்தான் அல் குர்ஆனும், நபிமொழியும் எடுத்தியம்புகின்றன.

'நிச்சயமாக முஸ்லிமாகிய ஆண்களும் பெண்களும், நம்பிக்கையாளரான ஆண்களும் பெண்களும், இறைவனை வழிபடும் ஆண்களும் பெண்களும், உண்மையே கூறும் ஆண்களும் பெண்களும், பொறுமையுள்ள ஆண்களும் பெண்களும், அல்லாஹ்வுக்குப் பயந்து நடக்கும் ஆண்களும் பெண்களும், தானம் செய்யும் ஆண்களும் பெண்களும், நோன்பு நோற்கும் ஆண்களும் பெண்களும், கற்புள்ள ஆண்களும் பெண்களும், அல்லாஹ்வுடைய திருப்பெயரை அதிகமாக நினைவுகூரும் ஆண்களும் பெண்களும் ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான கூலியையும் தயார்படுத்தி வைத்திருக்கின்றான்'. (அல் குர்ஆன் 33:35)

இவ்வசனம் முழுவதும் ஒன்றுக்குப் பலமுறை 'பெண்கள்' என்ற சொல் இடம் பெற்றிருப்பதில் இருந்தே பெண்கள் குறித்த மகத்துவத்தை புரிந்துகொள்ளலாம். பெண்களை பற்றி அல்லாஹ் தனியாக ஒன்றுமே கூறவில்லையே, என்று அன்னை உம்மு சல்மா (ரழி) கூறிய போது தான் இவ்வசனமே இறங்கத் தொடங்கிற்று.

பெண்களை மதிக்காத காலம் பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு அரபு நாட்டில் இருந்தது. அந்த நிலையை கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிய பெருமை இஸ்லாத்திற்கு உள்ளது. நபி (ஸல்) அவர்கள், தமது இறுதி உயிர்மூச்சை விடும் முன் தமது அன்புத்தோழர்களிடம் 'நீங்கள் பெண்கள் விஷயத்தில் மென்மையாக நடந்து கொள்ளுங்கள். அவர்களின் கன்னத்தில் அறையாதீர்கள், அவர்கள் உங்களிடம் அமானிதமாக ஒப்படைக்கப்பட்டவர்கள். எனவே நீங்கள் பெண்கள் விஷயத்தில் கவனமாக இருங்கள்' என்று கூறினார்கள். (நபிமொழி)

பெண்களைக் குறித்து நபி(ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு சொற்களும் கூர்ந்து கவனிக்கத்தக்கவை. குறிப்பாக பெண்கள் எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்து அல் குர்ஆன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

'(நபியே!) நம்பிக்கையுள்ள பெண்களுக்கும் நீங்கள் கூறுங்கள், அவர்களும் தங்கள் பார்வையைக் கீழ் நோக்கியே வைத்துத் தங்கள் கற்பையும் பாதுகாத்துக்கொள்ளவும். தவிர, தங்கள் தேகத்தில் (பெரும்பாலும்) வெளியில் இருக்கக் கூடியவைகளைத் தவிர தங்கள் (ஆடை ஆபரணம் போன்ற) அலங்காரத்தை வெளிக்காட்டாது மறைத்துக்கொள்ளவும். தங்கள் முந்தானைகளால் மார்பையும் மறைத்துக்கொள்ளவும். பெண்கள் தங்களுடைய கணவர்கள், தங்களுடைய தந்தைகள், தங்களுடைய கணவர்களின் தந்தைகள், தங்களுடைய பிள்ளைகள், தங்களுடைய கணவர்களின் பிள்ளைகள், தங்களுடைய சகோதரர்கள், தங்களுடைய சகோதரர்களின் பிள்ளைகள், தங்களுடைய சகோதரிகளின் பிள்ளைகள், அல்லது (முஸ்லிமாகிய) தங்களுடைய இனத்தாரின் பெண்கள், தங்களுடைய அடிமைகள் அல்லது பெண்களின் விருப்பமற்ற தங்களை அண்டி வாழும் ஆண்கள், பெண்களின் மறைவான அவயங்களை அறிந்து கொள்ளாத சிறுவயதையுடைய (ஆண்) குழந்தைகள் ஆகிய இவர்களைத் தவிர மற்றெவர் முன்பும் தங்களின் அலங்காரத்தை அறவே வெளிப்படுத்த வேண்டாம். இன்னும் (தாங்கள் அணிந்திருக்கும் ஆடை ஆபரணங்களை போன்ற) மறைந்திருக்கும் தங்களுடைய அலங்காரத்தை அறிவிக்கும் நோக்கத்துடன் தங்களுடைய கால்களை (பூமியில்) தட்டித்தட்டி நடக்க வேண்டாம். நம்பிக்கையாளர்களே! (இதில் எதிலும் உங்களால் தவறு ஏற்பட்டு விட்டால்) நீங்கள் வெற்றிபெறும் பொருட்டு அல்லாஹ்வின் பக்கமே பாவ மன்னிப்பைக் கோரி (உங்கள் மனதைத்) திருப்புங்கள். (திருக்குர்ஆன் 24:31)

பெண்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களது பெறுமதியும் முக்கியத்துவமும் வெளிவாக உணரப்பட வேண்டும். அதேநேரம் தங்கள் அழகையும், அலங்காரத்தையும் வெளிப்படுத்துவது தொடர்பில் பெண்கள் கூடுதல் கவனம் செலுத்தவும் தவறக் கூடாது. இதற்கு இஸ்லாம் வழங்கியுள்ள வழிகாட்டல் இதற்கு பெரிதும் பயன்மிக்கதாகும்.

அபூ மதீஹா...

# ஹோமாகம, காமினிபுர வீதி கையளிப்பு

கிராமிய வீதி புனரமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட ஹோமாகம, காமினிபுர 03 ஆவது ஒழுங்கை வீதி போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவினால் மக்களிடம் கையளிக்கப்பட்டது.

வீதியின் அபிவிருத்திக்காக 61 இலட்சம் ரூபா வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் செலவிடப்பட்டுள்ளது. நிகழ்வில் முன்னாள் உள்ளூராட்சி பிரதிநிதிகள், பிரதேசவாசிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



## அட்டுலுகம முஸ்லிம் மக்களின் சோகம்



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாலித தெவரப்பெருமவின் திடீர் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ள பண்டாரகம அட்டுலுகம முஸ்லிம்கள் வெள்ளைக் கொடிகளையும் பதாதைகளையும் ஏந்தி தமது துயரங்களை வெளிப்படுத்தினர். பாலித தெவரப்பெரும கொரோனா தொற்று காலத்தில் போது தனது கிராமத்திற்கு அவர் ஆற்றிய சேவையைப் பாராட்டி பதாகைகளை காட்சிப்படுத்தியிருந்தனர்.

## வீடுகளுக்குள் புகுந்து திருடும் 'நிஞ்ஜா' குழு

### அனைவரும் சிறுவர்கள் என கண்டுபிடிப்பு

முகத்தை மறைத்தவாறு கையுறைகளை அணிந்து 'நிஞ்ஜா' வீரர் போன்று வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து திருடும் கும்பலைச் சேரந்த மூவரை கஹதுடுவ பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் 13 மற்றும் 18 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்று தெரிவித்த பொலிஸார், கஹதுடுவ பகுதியைச் சேர்ந்த இவர்களுள் பாடசாலை மாணவர்களும் இருப்பதாகவும் குறிப்பிட்டனர்.

மடிகணினிகள், பித்தளைப் பொருட்கள், கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்டவை திருடப்பட்டு, சம வயதுடைய சிறுவர்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கும்பல் நீண்டகாலமாக திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு வருகிறது. திருடப்பட்ட பொருட்களை வாங்கியோர், பொலிஸ் காவலில் விசாரிக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## ஐ.ம.சக்தியின் பெலியத்தை தொகுதி அமைப்பாளர் பிரவீன் ஐ.தே.கவில் இணைவு

*லோரன்ஸ் செல்வநாயகம்*



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பெலியத்த தொகுதி அமைப்பாளர் டாக்டர் பிரவீன் ருவிந்த அதபத்து ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டுள்ளார். அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரான பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தனவிடமிருந்து கட்சியின் அங்கத்துவத்தையும் பெற்றுக் கொண்டுள்ளார். நேற்றைய தினம் பிடகோட்டேயில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தவுக்கு வருகை தந்துள்ள பிரவீன் ருவிந்த அத்தபத்து ஐ. தே. க. தவிசாளரை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளதுடன் அதனையடுத்து கட்சியின் அங்கத்துவத்தையும் பெற்றுக் கொண்டுள்ளார். அத்துடன் சுமுகமான கலந்துரையாடலுக்குப் பின் தமது முழுமையான ஆதரவை ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

அந்த கலந்துரையாடலையடுத்து நேற்று அவர் ஸ்ரீ கொத்தவில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றையும் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

## "வசத் சிரிய – 2024" புத்தாண்டு போட்டி விண்ணப்பங்களை ஏற்கும் காலம் நீடிப்பு

ஜனாதிபதி செயலக நலன்புரிச் சங்கம் மற்றும் அமைச்சுக்கள் இணைந்து எதிர்வரும் ஏப்ரல் (27 ) சனிக்கிழமை காலிமுகத்திடலில் சங்கரில்லா பசுமை மைதானத்தில் ஏற்பாடு செய்துள்ள "வசத் சிரிய 2024" தமிழ், சிங்களப் புத்தாண்டின் அழகன்அழகிப் போட்டிக்கான விண்ணப்பங்கள் ஏற்கும் கால எல்லை ஏப்ரல் 23 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் பங்கேற்க விரும்பும் போட்டியாளர்கள் மூன்று மாதங்களுக்குள் வர்ணப் புகைப்படத்துடன் பெயர், வயது, உயரம், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றை (23) பிற்பகல் 3.00 மணிக்கு முன்னர் 0771557146 எனும் வட்ஸ் அப் இலக்கத்திற்கு அனுப்ப வேண்டும். சகல விண்ணப்பதாரர்களும் 1830 வயதிற்குட்பட்ட திருமணமாகாதவர்களாக இருக்க வேண்டும். தமிழர் கலாசார உடையிலும் இந்தப் போட்டியில் கலந்துகொள்ள முடியும்.

வசத் சிரிய புத்தாண்டு அழகர்அழகி போட்டிகளில் முதலிடத்திற்கு தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாவும் ,இரண்டாம் இடத்துக்கு தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு 75 ஆயிரம் ரூபாவும் மூன்றாமிடம் பெறுவோருக்கு 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும். 12 ஆம் இடம் வரை ஆறுதல் பரிசிலும் சான்றிதழும் வழங்கப்படும். போட்டி நிபந்தனைகள் தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஏற்பாட்டுக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்களை திருமதி கிரிசாந்தி விதாரணவை (ஒருங்கிணைப்பாளர்) 0718412300 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

## இன்றைய பலன்கள் (19.04.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
தொழில் செய்பவர்கள் படிப்படியான வளர்ச்சியை பெறுவார்கள். வாடிக்கையாளர்கள் அதிருப்தி அடையாத வகையில் பணிகளை முடித்து கொடுப்பீர்கள்.

**ரிஷபம் :**
தொழில் செய்பவர்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். ஆனால் அதற்கேற்ற வருமானம் இருக்காது.

**மிதுனம்:**
சொந்தத் தொழில் செய்பவர்கள் தங்கள் துறையில் சுமாரான முன்னேற்றத்தை காண்பார்கள். ஆனாலும் வருமானத்தில் குறைவு ஏற்படாது.

**கடகம்:**
சொந்த தொழில் செய்பவர்கள் தங்கள் துறையில் வருவாய் பற்றாக்குறையை சந்திக்க வேண்டியதிருக்கும். ஆனாலும் அவற்றை சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு.

**சிம்மம்:**
சொந்த தொழில் செய்பவர்கள் உழைப்புக்கேற்ற ஊதியத்தை பெற்று மகிழ்வீர்கள். குறித்த நேரத்தில் பணிகளை முடித்துக் கொடுத்து வாடிக்கையாளர்களின் பாராட்டை பெறுவீர்கள்.

**கன்னி:**
உழைப்பு தேற்ற ஊதியம் உங்களை வந்தடையும். ஒரு சிலர் புதிய தொழில் ஒன்றை தொடங்குவது பற்றி சிந்திப்பீர்கள்.

**துலாம்:**
சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு வேலைபடுவது அதிகரிக்கும். இருப்பினும் வருமானம் போதுமானதாக இருக்கும் .

**விருச்சிகம்:**
உத்தியோகத்தில் சக பணியாளர்களின் எதிர்ப்புகளை கடந்த மின்னரை இடமாற்றம் பதவி உயர்வை பெற முடியும். சொந்த தொழில் செய்பவர்கள் தங்கள் துறையில் முன்னேற அதிகம் உழைக்க வேண்டியதிருக்கும்.

**தனுசு:**
உயர் அதிகாரிகளின் மூலம் சில சலுகைகளை பெறுவீர்கள். சொந்த தொழில் செய்பவர்கள் திருப்தியான வருமானத்தை பெற்று மகிழ்வீர்கள்.

**மகரம்:**
சொந்த தொழில் செய்பவர்கள் உழைப்பிற்கேற்ற வருமானம் இல்லையே என்று வருந்துவார்கள். அதே நேரம் வாடிக்கையாளர்களின் பாராட்டு உங்களை உற்சாகப்படுத்தும்.

**கும்பம்:**
கடுமையாக உழைக்க வேண்டியது இருந்தாலும் திருப்திகரமான வருவாய் இருக்குமா என்பது சந்தேகம் தான். கூட்டுத்தொழில் செய்பவர்கள் வியாபாரத்தில் வளர்ச்சி காண்பது கடினம்.

**மீனம்:**
சக ஊழியர்களின் குடும்ப விஷயங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. சொந்த தொழில் செய்பவர்கள் தங்கள் துறையில் திருப்திகரமான வருவாயை பெறுவார்கள்.

### ரஷ்ய படையில் கூலிவேலைக்கு...

மேற்படி நபர் ஐரோப்பாவில் தொழில் வாய்ப்பு பெற்றுத்தருவதாக தெரிவித்து கோடிக்கணக்கான ரூபா பணத்தை மோசடி செய்தவரென்றும் விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது. ரஷ்ய இராணுவ முகாம்களை சுத்தம் செய்தல், பங்கர்களை திருத்துதல் போன்ற நடவடிக்கைகளுக்கே இலங்கை ஓய்வுபெற்ற இராணுவ வீரர்களை ரஷ்யாவுக்கு அழைத்துச்சென்றுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ரஷ்ய இராணுவ சேவையில் 500 க்கும் மேற்பட்ட இலங்கையர் உள்ளதாக அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன. வாரியபொலயை வசிப்பிடமாகக் கொண்ட ஓய்வுபெற்ற மேஜர் மூலம் மேற்படி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கோப்ரல் ஒருவர் உட்பட 37 பேர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் ஊடாக கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி ரஷ்யா சென்றுள்ளனர்.

அவர்கள் அனைவரும் ஓய்வுபெற்ற இராணுவ வீரர்கள் என்றும் தகவல்கள் கிடைத்துள்ளதாக அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### மின்சாரத்துறை மறுசீரமைப்பு...

இச்சட்டமூலத்தின் உத்தியோகபூர்வ தன்மை தொடர்பில் உச்ச நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்துவதற்கான அவகாசத்தை வழங்கும் வகையில், சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் தினத்திலிருந்து இரண்டு வார கால அவகாசம் வழங்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

### ஈஸ்டர் தாக்குதலில் பலியானோருக்கு...

கொழும்பு உயர்மறை மாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அனைவரையும் கேட்டுக்கொண்டுள்ளார். அன்றைய தினம் கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் விசேட வழிபாடுகளும் இடம் பெறவுள்ளன. மேற்படி அஞ்சலி நிகழ்வையொட்டி 20 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்திலிருந்து அஞ்சலி ஊர்வலம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த ஊர்வலம் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயத்தை சென்றடைந்து இரவு முழுவதும் செப வழிபாடுகள் இடம் பெறுவதுடன் காலை 8.30 மணியளவில் அங்கு விசேட வழிபாடுகள் இடம் பெறவுள்ளன.

### சர்வதேச இறையாண்மை...(03 ஆம் பக்க தொடர்ச்சி)

அதேவேளை, சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வசந்தகால மாநாட்டில் இணைந்து கொண்டுள்ள நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க மற்றும் ஜப்பானின் சர்வதேச விவகாரங்களுக்கான பிரதி நிதியமைச்சர் புஜி டெய்ஜோ ஆகியோருக்குமி டையில் சந்திப்பொன்று இடம் பெற்றது. இந்த சந்திப்பில், கடன் மறுசீரமைப்பு செயல்முறையை விரைவாக முடிவுக்குக் கொண்டுவர ஜப்பானின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக ஜப்பானிய பிரதி நிதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இதற்கிடையில், உலக வங்கியின் தனியார் துறைக்கு சேவைகளை வழங்கும் அமைப்பான சர்வதேச அறக்கட்டளையின் பிராந்திய துணைத் தலைவர் ரிக்கார்டோ புலிட்டுடனும் நிதி இராஜாங்க அமைச்சர் கலந்துரையாடியுள்ளார்.

### வயோதிப சகோதரிகள்.... (07 ஆம் பக்க தொடர்ச்சி)

சடலங்கள் காண்பட்ட வீட்டிலிருந்து கடும் துர்நாற்றம் வீசுவதாக 119 பொலிஸாரின் அவசர தொலைபேசி ஊடாக தகவல் வழங்கப்பட்டது.இதையடுத்து வீட்டுக்குச் சென்ற பொலிஸார் வீட்டின் கதவுகள் பூட்டப்பட்டிருந்த நிலையில், ஜன்னல் வழியாகப் பார்த்தனர். அங்கு சடலங்கள் கிடப்பதை அவதானித்தனர். இதுதொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்னறர்.

### சுற்றுச்சூழல் மாசு: குற்றங்களை...

மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டே இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். இதற்கு வசதியாகவே இத்தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அந்த வகையில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சுற்றுச்சூழலுக்கு ஏதேனும் பாதிப்புகள் ஏற்பட்டால், உடனடியாக மேற்படி தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உடனடியாக அறிவிக்குமாறும் அவர் பொது மக்களைக் கேட்டுள்ளார். சுற்றாடல் பாதிப்பு தொடர்பான சோதனைகளை மேற்கொள்வதற்காக பொலிஸ் விசேட பணியகத்தின் 1997 என்று அவசர இலக்கமும், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 1981 என்ற அவசர இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

### மியன்மாரில் மீட்கப்பட்ட...

திரும்பியதாக விமான நிலைய செய்தியாளர் தெரிவித்தார்.இவர்களில்,

06 ஆண்களும் இரண்டு பெண்களும் உள்ளடங்குகின்றனர்.கடந்த மார்ச் (04) மியன்மாரின் மியாவாடி இணையக் குற்றப் பகுதியில், பலவந்தமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த 08 இலங்கையர்களை விடுவிப்பதற்காக மியன்மார் பாதுகாப்பு படையினர் செயற்பட்டனர்.

இலங்கைக்கு அனுப்பும் நோக்கில் மியாவாடி மத்திய பொலிஸ் நிலையத்தில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், பாதுகாப்பு நிலைமை தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினையால் கடந்த (11) மியான்மரில் உள்ள இலங்கை தூதரகம் மற்றும் அந்நாட்டு அதிகாரிகள் அவர்களை தாய்லாந்தில் உள்ள இலங்கை தூதரகத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுத்தனர்.

### ஜனாதிபதி ரணில் இந்த... (07 ஆம் பக்க தொடர்ச்சி)

தலைவர்களின் தவறான முடிவுகளினால் நாட்டின் பிரஜைகள் பல இக்கட்டான நிலைமைகளை எதிர்கொண்டனர் என்பதை புத்தாண்டில் நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

எந்த அரசியல் கட்சியும் குற்றச்சாட்டிலிருந்து விடுபட முடியாது. ஜே.வி.பி கூட கடந்த காலங்களில் அமைச்சுப் பதவிகளை வகித்துள்ளதுடன், அவர்களும் நாட்டின் பொருளாதார நிலை குறித்து சிறிதளவும் கவனம் செலுத்தவில்லை,

கடனை திருப்பிச் செலுத்தும் சுமையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுமக்க வேண்டியுள்ளது.

2001–2004 ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் 2004 ஏப்ரல் 10 ஆம் திகதி கவிழ்க்கப்பட்டதற்கு ஜே.வி.பி யும் காரணம். நாட்டின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஒன்றுபட வேண்டும். வெறுப்பை உமிழ்வோர் மற்றும் பொய்களைப் பரப்புபவர்கள் தங்கள் தனிப்பட்ட நம்பிக்கைகளுக்கு ஏற்ப மோசமான சூழ்நிலைகளை எதிர்கொள்வார்கள். நாட்டை எவரும் பொறுப்பேற்கத் தயாராக இல்லாதபோது, ரணில் விக்கிரமசிங்க நாட்டின் நலனுக்காக தோள்கொடுக்க முன் வந்தார்.

ஆனால் அவர் அனைவரது ஒத்துழைப்பையம் கோரியிருந்தார். இன்றும் சிலர் அவருக்கு ஒத்துழைப்பு வழங்காது தேசிய ரீதியில் மக்களை தவறாக வழி நடத்தி அந்நிய சக்திகளின் தேவைகளை நிறைவேற்றி வருவதாக எமக்கு தெரிகிறது.

பழங்கால மன்னர்களின் துரோகம் உட்பட, இலங்கை தனது சொந்த நாட்டு மக்களால் காட்டிக் கொடுக்கப்பட்டது என்பதற்கான சான்றுகளை வரலாறு கொண்டுள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுப்பது எளிதான காரியம் அல்ல.

ஜனாதிபதியின் தற்போதைய வேலைத்திட்டம் சீர்குலைந்தால், சமையல் எரிவாயு, எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்காக இலங்கையர் மீண்டும் வரிசையில் நிற்க வேண்டிய நிலை ஏற்படும். இந்த புத்தாண்டில் அரசியல் கட்சிகள் இதுபோன்ற தவறான செயல்களில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கை ரூபாய் நிதி வர்த்தக சந்தைகளில் வலுவான நாணயங்களில் ஒன்றாக உள்ளது. அமெரிக்க டொலருக்கு எதிராக முந்தைய வாரங்களில் ரூபாவின் மதிப்பு தொடர்ந்து உயர்ந்துள்ளது. ஜூன் 2023க்குப் பிறகு முதல் முறையாக ரூபாய் வலுவடைந்துள்ளதாக மத்திய வங்கி அறிக்கை கூறுகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

### ஆட்பதிவு திணைக்களத்தின் மத்திய ...

இந்த அலுவலகம் நுவரெலியா நகரில் இலக்கம் 95/26 A, லேடி மெகலம் வீதி, ஹாலிஎல என்ற புதிய விலாசத்திலுள்ள கட்டடத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இங்கு சாதாரண சேவையூடாக தேசிய அடையாள அட்டைகளை பெறுவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

வெகு விரைவில் ஒருநாள் சேவை ஆரம்பிக்கப்படும் என்றும் ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

### அண்மைக்கால உயிரிழப்புகளுக்கு...

எண்ணிக்கையிலான உயிரிழப்புக்கள், மாரடைப்பால் ஏற்பட்டடுள்ளது.

ஆரோக்கியமற்ற உணவுப்பழக்கம், உடல் உழைப்பின்மை, புகையிலை, மது அருந்துதல், மன அழுத்தம் ஆகியவையே மாரடைப்புக்கு முக்கியமான காரணமென சுகாதார அமைச்சின் தொற்றா நோய்களுக்கான பிரிவின் விசேட மருத்துவர் ஷெரில் பாலசிங்கம் இந்த தகவல்களை தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### இந்திய பாராளுமன்ற தேர்தல்...

இரண்டரை மாத காலத்துக்கு 07 கட்டங்களாக நடைபெறும். முதல் கட்ட தேர்தல் இன்றும் (19), 2 ஆவது கட்டம் ஏப்ரல் 26 ஆம் திகதியும், மூன்றாம் கட்டம் மே 7 ஆம் திகதியும், நான்காம் கட்டம் மே 13 ஆம் திகதியும், ஐந்தாம் கட்டம் மே 20 ஆம் திகதியும், ஆறாம் கட்டம் மே 25 ஆம் திகதியும், ஏழாவது கட்டம் ஜூன் 1 ஆம் திகதியும் நடைபெறும் என இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஜூன் 04 ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை மற்றும் முடிவுகள் வெளியிடப்படும். இந்த பொதுத்தேர்தலில் 970 மில்லியன் மக்கள் வாக்களிக்க பதிவு செய்துள்ளனர்.

### செவ்வாய் கிரகத்தின் ஆய்வுக்காக...

"மனித ஆய்வு ஆராய்ச்சி அனலாக்" பணி பகுதிக்குள் நுழைய திட்டமிட்டுள்ளனர். அதிலிருந்து 45 நாட்கள் விண்வெளி வீரர்களாக பணியாற்றுவார்கள் என்று நாசா அறிவித்துள்ளது.

அத்துடன் இவ்விண்வெளி வீரர்களை சந்திரன், செவ்வாய் மற்றும் விண்வெளியின் பிற பகுதிகளுக்கு அனுப்புவதற்கு முன், அவர்களுக்கு தேவையான பூர்வாங்க பயிற்சி வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் விண்வெளி வீரர்கர் தேவையான அறிவைப் பெறும் வாய்ப்பையும் பெறுவார்கள் எனவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இக்குழுவிற்கு இலங்கை விஞ்ஞானியான பியுமி விஜேசேகர தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர், கலிபோர்னியாவில் உள்ள நாசா அமெஸ் ஆராய்ச்சி மையத்தில் கதிர்வீச்சு உயிரியல் இயற்பியல் ஆய்வகத்தில் ஆராய்ச்சி விஞ்ஞானியாக பணியாற்றி வருகிறமை குறிப்பிடத்தக்கது.

### ஸ்ரீ.ல.சு.க: மைத்திரியின் பதவி...

மனுவை தாக்கல் செய்திருந்தார். கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் இம்மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, மைத்திரிபால சிறிசேனவிற்கான தடையுத்தரவு தொடர்ந்தும் நீடிக்கப்பட்டது.

அதேவேளை, மேற்படி விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மைத்திரிபால சிறிசேன கட்சியையும் அழித்து நாட்டையும் அளித்துள்ளார். அவரால் இழைக்கப்பட்ட தவறுகளை தற்போது நிவர்த்தி செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ளக ரீதியில் பல்வேறு நெருக்கடிகள் நிலவும் நிலையில், அக்கட்சியின் செயற்குழு கூடிய போதே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்

### தங்கத்தின் விலை மீண்டும்...

22 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 1,76,600 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் தங்கத்தின் விலை, இரண்டு இலட்சத்தை தொட்டிருந்தது.

தற்போது மீண்டும் தங்கத்தின் விலையில் வரலாறு காணாத அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

### புது வருடக்காலாண்டில் ஏழு...

சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இது நாட்டுக்கு வரும் சுற்றுலா பயணிகளின் வளர்ச்சி வேகம் சீராக இருப்பதை காட்டுவதாகவும் சுற்றுலா அபிவிரித்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. தனது பிரஜைகளுக்காக வெளியிட்டுள்ள இலங்கைக்கான பயண ஆலோசனையை பிரித்தானியா தளர்த்தியுள்ளதால், அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளின் வருகை எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் அமைச்சர் தெவரப்பெருமவுக்கு...

# அட்டுலுகமைப் பகுதியில் வெள்ளைக் கொடி பறக்கவிடப்பட்டு அனுதாபம்

(மொறட்டுவை மத்திய விசேட நிருபர்)

களுத்துறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான பாலித தெவரப்பெருமயின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து அட்டுலுகமையில் பல்வேறு இடங்களிலும் வெள்ளைக் கொடி பறக்கவிடப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.



மறைந்த முன்னாள் அமைச்சர் பாலிததெவரப்பெரும பண்டாரகமையில் உள்ள அட்டுலுகமை கிராம மக்களுடன் அன்பாகப்பழகி நெருங்கிய தொடர்பு வைத்திருந்தது தான் இதற்கான காரணம் என பலரும் தெரிவித்தனர்.

கொரோனா காலத்தில் அட்டுலுகம கிராமம் தனிமைப்படுத்தப்பட்டபோது அந்த கிராம மக்களுக்கு தெவரப்பெரும செய்த உதவி ஒத்தாசைகளை அக்கிராம மக்கள் மறக்காமல் நன்றி உணர்வுடன் இன்று செயற்படுத்தியுள்ளது. இதுதான் இதற்கான காரணம் என்றும் அட்டுலுக்கமை கிராம மக்கள் தெரிவித்தனர்.

## புத்தாண்டு மரநடுகை நிகழ்வில் பிரதமர்



தமிழ் சிங்கள புத்தாண்டில் விசேட அம்சமாக கருதப்படும் சுபவேளையில் மரம் நடும் நிகழ்வு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் நேற்று (18) காலை 10.16 மணிக்கு அலரி மாளிகை வளாகத்தில் நடைபெற்றது.

இதன்போது பிரதமர் நெல்லி மரக்கன்றை சுப வேளையில் நட்டு வைத்தார். நிகழ்வில் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்த்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

# டயலொக், எயார்டெல் நிறுவனங்கள் ஒன்றிணைந்து செயற்பட ஒப்பந்தம்

டயலொக்கும் ஆசி ஆட்டா குழுமமும் பார்த்தி எயார் டெல்லும் தொழிற்பாடுகளை ஒன்றிணைந்து முன்னெடுக்க ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன. பங்குதாரர்களின் வருவாயை மேம்படுத்தவும் வாடிக்கையாளர் களுக்கு உன்னதமான அனுபவத்தை வழங்கும் நோக்கிலும் இந்நிறுவனங்கள் இணைந்து செயற்படவுள்ளன.

டயலொக் ஆசி ஆட்டா பிஎல்சி ("Dialog"), ஆசி ஆட்டா குழுமம் பெர்ஹாட் ("Axiata") மற்றும் பார்த்தி எயார் டெல்லிமிடட் ("Bharti Airtel") ஆகியன பார்த்தி ("Airtel Lanka") எயார் டெல்லங்கா லிமிடட்டின் வெளியிடப்பட்ட பங்குகளை முழுமையாக கையகப்படுத்துதல் குறித்த வரையறுக்கப்பட்ட ஒப்பந்தத்திற்கு 2024, 04, 18 இல் இணக்கம் தெரிவித்துள்ளன.

இந்த உடன்படிக்கையின் கீழ், எயார்டெல் லங்காவின் வெளியிடப்பட்ட பங்குகளில் நூறு வீதத்தை டயலொக் நிறுவனம் கையகப்படுத்தும். அதேவேளை, டயலொக்கின் வெளியிடப்பட்ட 10.355 வீத மொத்த மதிப்பிலான சாதாரண வாக்குரிமை பங்குகளை பங்கு மாற்று முறை மூலம் பார்த்தி டயலொக் நிறுவனம் எயார்டெலுக்கு வழங்கவுள்ளது.

இந்த பரிவர்த்தனை டயலொக் பங்குதாரர்களின் ஒப்புதலுக்கு உட்பட்டதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. மற்றும் பங்கு விற்பனை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பிட்ட நிபந்தனைகளை பூர்த்திசெய்யும் வரை இவை,நிலுவையிலும் இருக்கும் என, பார்த்தி எயார்டெல் லிமிடட் கூட்டுத்தாபன தொடர்பாடல்கள் சிரேஷ்ட துணைத் தலைவர் கின்ஷூக்குப்தா தெரிவித்துள்ளார்.

# உலகின் மிகப்பெரிய ஜனநாயக திருவிழாவாக இந்திய தேர்தல்

## தமுகூ தலைவர் மனோ MP வாழ்த்து

உலகின் மிகப்பெரிய ஜனநாயக திருவிழாவின் முதலாம் கட்டம் இன்று ஆரம்பமாகிறது.பல கட்சி அரசியல் ஜனநாயகம் காரணமாக, உலக பரப்பில் மிக உயரத்தில் இந்தியா மதிக்கப்படுவதாக தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐ.ம.ச மற்றும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, தே.ம.ச தலைவர் அனுரகுமார திசாநாயக்க ஆகியோருக்கும் குறியிடப்பட்டுள்ள தனது எக்ஸ் தள பதிவில் மனோ கணேசன் எம்பி மேலும் கூறியுள்ளதாவது,

543 தொகுதிகள், 28 மாநிலங்கள், 08 ஒன்றிய பிரதேசங்கள் ஆகியனவற்றை ஊடுருவி சுமார் 97 கோடி வாக்காளர்கள் இதில் வாக்களிக்கவுள்ளனர். 2,600 கட்சிகளின் வேட்பாளர்களை கொண்ட உலகின் மிக பிரமாண்ட ஜனநாயக தேர்தல் நடவடிக்கையின் மூலம், ஆறு வாரங்களில் ஏழு கட்டங்களாக இந்தத் தேர்தல் நடைபெறவுள்ளது. இதன் மூலம் இந்தியாவின் பல கட்சி ஜனநாயக இந்திய ஒன்றியம் என்ற இந்திய அரசாங்கம் தெரிவு செய்யப்படும். இலங்கை



பிரஜை என்ற பெருமையுடனும், மறைக்கப்பட முடியாத இந்திய வம்சாவளி பின்னணியுடனும், இந்திய நாட்டு தேர்தல்களை கணிக்கின்ற இலங்கையின் ஒரு ஜனநாயக கட்சி தலைவர் என்ற முறையில் இந்திய தேர்தல் பிரசாரத்தில் என் மனதை வெகுவாக கவர்ந்த சுலோகம் ஒன்று உண்டு.

அது, "நீங்கள் யாருக்கு வாக்களிக்க போகின்றீர்கள் என்பதற்கு நேரம் எடுத்து சிந்தியுங்கள்! சரியாக சிந்தித்து உங்கள் சரியான எம்பியை தெரிவு செய்யுங்கள் என்ற சுலோகமாகும்.



அம்பாறை மாவட்டத்தில் இயங்கி வரும் "சிலோன் ஜேர்னலிஸ்ட்ஸ்" போரத்தினால் சமூக சேவையாளரும், அ.இ.ம.காங்கிரஸின் அட்டாளைச்சேனை அமைப்பாளருமான ஏகே அமீர் பாராட்டப்பட்டார். அவரின் சேவையைப் பாராட்டி பொன்னாடை போத்தி நினைவு சின்னம் வழங்கப்பட்டது.

(பாலமுனை தினகரன் நிருபர்)

இன,மத விழுமியங்களுக்கு மதிப்பளிக்கும் நாடாக இருக்க வேண்டுமெனில்

# ஜனாதிபதி ரணில் இந்த நாட்டின் தலைவராக இருக்க வேண்டும்

இன, மத விழுமியங்களுக்கு மதிப்பளிக்கும் நாடாக இலங்கை இருக்க வேண்டுமானால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைவராக இருக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன எம்.பி (18) தெரிவித்தார்.



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று (18) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் எமது நாட்டுத்

06

## வயோதிப சகோதரிகள் வீட்டுக்குள் மர்ம மரணம்

களுத்துறை வீடொன்றில் சம்பவம்

களுத்துறை வீடொன்றில் வசித்து வந்த வயோதிப சகோதரிகள் இருவர், சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்துள்ளதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இசுரு உயன முதலாம் குறுக்குத் தெருவைச் சேர்நத 79 வயதான எம்.ஜி.பிலிபினா மற்றும் 65 வயதான டி.எம். மேரி கெத்தரின் மான்சிஸ் ஆகிய இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

06

# காரைநகரில் 'பட்டு மாமா' வுக்கு பெருவிழா



















காரைநகர், வாரிவளவு நல்லியக்க சபையின் ஸ்தாபகத் தலைவராக இருந்து பல தசாப்தங்களாக காரைநகரில் மாணவர்கள் மற்றும் இளைஞர் யுவதிகளிடையே விளையாட்டுப் போட்டிகளை நடத்தி உற்சாகப்படுத்திய மறைந்த மாமனிதர் 'பட்டுமாமா' என காரைநகர் மக்களால் அழைக்கப்படும் பத்மநாதனின் நினைவாக கடந்த செவ்வாய்க்கிழமை காரைநகரில் அவருக்கு மாபெரும் ஞாபகார்த்த விழா நடத்தப்பட்டது. வடமாகாண பிரதம செயலாளர் எஸ். இளங்கோவன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். விழாவின் நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

புதன் 2024.04.17

உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 5448
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 29,326,272.00
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 0 7 0 9 2 0

**அத சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 023
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 0 9 2 0

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம் 3690 — சீட்டிழுப்பு திகதி 2024.04.17
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 73,616,871.76
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 05 67 75 79 — விசேட எழுத்து K
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 21548

**Mega POWER**
சீட்டிழுப்பு இலக்கம் 1796 — 2024.04.17
83401
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 430,331,226.00
ஆங்கில எழுத்து K — சுப்பர் இலக்கம் 03 — வெற்றி இலக்கங்கள் 24 32 55 64
அடுத்த டபள் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**VIP**
திகதி 2024.04.17 — சீட்டிழுப்பு இலக்கம் 0274
ஆங்கில எழுத்து T — L7 எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 3 5 4 4 9 2
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 28,494,762.48

**ராசி சுப பலன்**
திகதி 2024.04.17 — சீட்டிழுப்பு இலக்கம் 757 — செவ்வாய்
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,321,773.16
வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 09 38 43 61
தனயோக இலக்கம் 53025 — நாளுக்கான விதி எண் 13

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் 1478 — 2024.04.17
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 88,804,071.60
ஆங்கில எழுத்து O — வெற்றி இலக்கங்கள் 01 29 31 46 — விசேட எழுத்து O
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 27570

# கிழக்கின் குரல்



## சாய்ந்தமருது கடலரிப்பு; இரண்டாவது கட்டமாக அணை இடும் நடவடிக்கை

**சம்மாந்துறை கிழக்கு தினகரன், மாளிகைக்காடு குறூப் நிருபர்கள்**



அம்பாறையின் சாய்ந்தமருது மருதூர்சதுக்கம் மற்றும் அதனை அண்டியுள்ள கடற்றொழில் பிரதேசம் கடலரிப்பால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பாதுகாப்பு அணை இடும் இரண்டாம் கட்டப் பணி நேற்று முன்தினம் புதன்கிழமை (17) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தை தேசிய காங்கிரஸ் தலைவரும் திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா ஆரம்பித்து வைத்தார்.

கடலரிப்பால் ஏற்படும் பாதிப்புத் தொடர்பாக சாய்ந்தமருது இயற்கை நேசிக்கும் மன்ற செயற்பாட்டாளர்கள் முகநூல் மற்றும் ஊடகங்கள் வாயிலாக சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதற்கான வேலைத்திட்டத்தில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் ஏ.ஆஷிக், கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஏ.ஜி.எம்.அஸ்மி, கரையோரம் பேணல் திணைக்களம் மற்றும் கரையோரம் மூலவள திணைக்களத்தின் பொறியியலாளர் எம்.துளசிதாசன், சாய்ந்தமருது பிரதேச செயலக சிரேஷ்ட அதிகாரி முஹம்மத் நளீர், கரையோரம் பேணல் திணைக்களத்தின் சாய்ந்தமருது பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.நுஸ்ரத் அலி, கடற்றொழிலாளர்கள் உள்ளிட்ட பலர் பங்குபற்றினர்.

## நிந்தவூர் வடக்கில் கடலரிப்பை தடுக்க தடுப்பு சுவர் அமைக்கும் வேலைத்திட்டம்

### பைசால் காசிம் எம்.பி. கள விஜயம்

**சம்மாந்துறை கிழக்கு தினகரன், ஒலுவில் விசேட நிருபர்கள்**



நிந்தவூர் பிரதேசத்தின் வடக்கு கடல் எல்லையில் கடலரிப்பை தடுப்பதற்காக இரண்டாம் கட்ட வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் நோக்கில் பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் கள விஜயம் செய்து அங்குள்ள நிலைமையை அவதானித்துள்ளார்.

இக்கடலரிப்பு தொடர்பாக நிந்தவூர் கரைவலை மீன்பிடிச் சங்கத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்றுக்கொண்டு பைசால் காசிம் எம்.பி. இந்த கள விஜயத்தை அண்மையில் மேற்கொண்டார்.

நிந்தவூர் பிரதேசத்தின் வடக்கு கடல் எல்லையில் கடலரிப்பை தடுப்பதற்காக கரைக்கு குறுக்கால் கல் வீதி அமைக்கும் நிரந்தர தீர்வு திட்டத்துக்காக மேற்பார்வை செய்யும் நோக்கில் அவர் கள விஜயம் செய்தார்.

நிந்தவூர் ரவாஹா பள்ளிவாசல் முன் கடல் எல்லை தொடக்கம் காரைதீவுவரை தடுப்புச் சுவர் அமைக்கவுள்ளதுடன், எதிர்வரும் மே மாத நடுப்பகுதியில் இவ்வேலைத்திட்டத்தை தொடங்கவுள்ளதாக, பைசால் காசிம் எம்.பி. தெரிவித்தார். இதற்காக இரண்டாம் கட்டமாக 20 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

ஏற்கெனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் விடுத்த கோரிக்கைக்கமைய முதற்கட்டமாக 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தடுப்புச் சுவர் நிர்மாணிக்கப்பட்டதாகவும் இரண்டாம் கட்ட தடுப்புச் சுவர் அமைக்கும் பணி முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

கரையோர பாதுகாப்பு பேணல் திணைக்களத்தின் கிழக்கு பிராந்திய பொறியியலாளர் எம்.துளசிதாஸன், கிழக்கு கரையோர பாதுகாப்பு பேணல் திணைக்களத்தின் நிர்வாக உத்தியோகத்தர்கள், கடற்றொழில் சங்க உறுப்பினர்கள், கடற்றொழிலாளர்கள் ஆகியோர் கள விஜயத்தில் பங்குபற்றினர்.

### திருக்கோவிலில்

## சிங்களமொழி பயிற்சிநெறியை பூர்த்தி செய்தோருக்கு சான்றிதழ்



**காரைதீவு குறூப் நிருபர்**

நீதி அமைச்சின் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகத்தின் அனுசரணையுடன் திருக்கோவில் பிரதேச செயலகத்தில் நடத்தப்பட்ட சிங்களமொழி தொடர்பாடல் பயிற்சியை பூர்த்தி செய்தோருக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு அப்பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

100 மணித்தியாலங்களை கொண்டதாக இப்பயிற்சி நடத்தப்பட்டதுடன், இதில் இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டு நன்மையடைந்தனர். இப்பயிற்சிநெறியின் வளவாளராக சுதேஷ் ருஷாந்தன் செயற்பட்டார்.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரனின் வழிகாட்டலின் கீழ் உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.நிருபா தலைமையில் தேசிய ஒருமைப்பாட்டு இணைப்பாளர் ஏ.ஆன்ஸி யுரேமினியின் ஒருங்கிணைப்பில் இந்நிகழ்வு நடைபெற்றது.

### தென்கிழக்கு பல்கலையில்

## இலங்கை நூலக சங்கத்தின் 18ஆவது தேசிய ஆய்வு மாநாடு

**அட்டாளைச்சேனை விசேட நிருபர்**



இலங்கை நூலக சங்கத்தின் 18ஆவது தேசிய ஆய்வு மாநாடு முதல் தடவையாக கிழக்கு மாகாணத்தில் தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில் நுட்பவியல் பீடத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

'நூலகங்கள் மற்றும் சமூகத்தின் இணைப்பு, சமூகத்தின் மூலம் பிணைப்பினை வலுப்படுத்தல்' எனும் தொனிப்பொருளின் கீழ் இம்மாநாடு நடைபெறுவதுடன், விசேடமாக இலங்கையில் மும்மொழிகளிலும் இம்மாநாடு நடத்தப்படுகிறது.

தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் கலாநிதி முஹம்மட் மஸ்றூபா தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் பிரதம அதிதியாக அப்பல்கலைக்கழகபதில் உபவேந்தரும் கலை, கலாசாரபீட பீடாதிபதியுமான பேராசிரியர் எம்.எம்.பாஸில் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

ஆய்வு மாநாட்டின் முதன்மை பேச்சாளராக பேராதனை பல்கலைக்கழக நூலகர் ஆர்.மகேஸ்வரன் உரையாற்றினார்.

கௌரவ அதிதிகளாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன், கிழக்கு பல்கலைக்கழக நூலகர் கலாநிதி டபிள்யூ. ஜே.ஜெயராஜ், தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீட தலைவர் யு.எல்.அப்துல் மஜீத், இலங்கை நூலக சங்கத் தலைவர் பிருத்தி லியனகே, யாழ். பல்கலைக்கழக பதில் நூலகர் கலாநிதி கே.சந்திரசேகர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது அதிதிகள் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன், மாநாட்டு மலரும் வழங்கி வைக்கப்பட்டது.

### ஆரையம்பதியில்

## கரையொதுங்கிய பெண்ணின் சடலம்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி, பாலமுனை கடற்கரையில் பெண் ஒருவரின் சடலம் நேற்று வியாழக்கிழமை கரையொதுங்கியதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 55 வயது மதிக்கத்தக்க பெண்ணினது சடலமே இவ்வாறு கரையொதுங்கியதாகவும், பொலிஸார் கூறினர்.

இது தொடர்பாக காத்தான்குடி பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து சம்பவ இடத்துக்கு சென்று சடலத்தை மீட்டதுடன், விசாரணையையும் மேற்கொண்டு வருகின்றனர்.

சடலத்தை அடையாளம் நோக்கில் விசாரணை இடம் பெறுவதாகவும், பொலிஸார் கூறினர்.

## கிழக்குக்கு படையெடுக்கும் சுற்றுலாப் பயணிகள்

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை தற்போது அதிகரித்து வருவதுடன், சுற்றுலாத்துறை சார்ந்த தொழில் துறையில் ஈடுபடுபவர்களும் மிகவும் ஆர்வத்துடன் தமது தொழிலை முன்னெடுத்துள்ளனர். வசந்தகாலம் நிலவும் இந்தக் காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்திலுள்ள கடற்கரைகள் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வந்து செல்வதுடன், அவற்றின் இயற்கை அழகையும் கண்டு களிக்கின்றனர்.

அத்துடன் சித்திரைப் புத்தாண்டையிட்டு கிராமங்களில் நடைபெறும் புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகளையும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மிகவும் ஆர்வத்துடன் காண்கின்றனர்.

## அம்பியூலன்ஸ் பற்றாக்குறையால் நோயாளர்கள் மிகவும் சிரமம்

**றொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையில் அம்பியூலன்ஸ் வண்டிகளுக்கான பற்றாக்குறையால் நோயாளர்கள் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகியுள்ளதாக, பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வைத்தியசாலையின் பாவனைக்காக 12 அம்பியூலன்ஸ்கள் இருந்தும், தற்போது 3 அம்பியூலன்ஸ்கள் மாத்திரமே சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

இதனால் நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காக வேறு வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்வதில் தாமதம் ஏற்படுவதாகவும், இதனால் நோயாளர்கள் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளதாகவும், அம்மக்கள் தெரிவிக்கின்றனர். 2 அம்பியூலன்ஸ்கள் முற்றாக பாவிக்க முடியாதுள்ளதுடன், ஏனைய 7 அம்பியூலன்ஸ்கள் திருத்தம் செய்ய வேண்டிய நிலையில் வேலைத்தளங்களிலும் வைத்தியசாலை வளாகங்களிலும் நீண்டகாலம் தரித்து நிற்பதாக தெரிவிக்கப்படுகிறது.

## மூதூரில் செயலமர்வு



**தோப்பூர் தினகரன் நிருபர்**

பயனுடையதான மக்கள் பங்களிப்பினூடாக உள்ளூராட்சி சபைகளில் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றை மேம்படுத்துவது தொடர்பான செயலமர்வு மூதூர் பிரதேசத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை (17) நடைபெற்றது.

மூதூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இச்செயலமர்வு நடைபெற்றதுடன், இதன்போது உள்ளூராட்சி சபை நடவடிக்கைகள், அவற்றை மேம்படுத்துதல் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டன.

மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக் தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில் அரசாங்க அலுவலர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நவீனமுறை விவசாய செய்கை; மட்டக்களப்பில் கலந்துரையாடல்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

எதிர்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நவீன முறையில் விவசாய செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பான கலந்துரையாடல், அம்மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

விவசாயத்தில் புதிய தொழில் நுட்பத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் மாவட்ட வர்த்தக கைத்தொழில் மற்றும் விவசாய சம்மேளனத்தால் பல முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

நாற்று நடுகையில் நிலவும் சவால், நவீன தொழில்நுட்ப இயந்திரங்களின் பங்களிப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக விவசாயிகளுக்கு இதன் போது விளக்கமளிக்கப்பட்டது.

## சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்யப்படவுள்ள கடுகண்ணாவை

### மதிப்பீட்டு பணி முன்னெடுப்பு

**அக்குறணை குறூப் நிருபர்**



கடுகண்ணாவை பிரதேசம் சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளதை தொடர்ந்து அதற்கான மதிப்பீட்டு பணியை மத்திய மாகாண அதிகாரிகள் குழுவினர் நேற்று மேற்கொண்டனர்.

மத்திய மாகாணத்தில் பல இடங்கள் சுற்றுலா வலயங்களாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. அதிலொன்றே கடுகண்ணாவை சுற்றுலா வலய அபிவிருத்தியாகும்.

மத்திய மாகாண பிரதான செயலாளர் அஜித் பிரேமவன்ச தலைமையிலான குழுவினர் நேரடியாகச் சென்று மதிப்பீட்டு பணியை மேற்கொண்டனர்.

கண்டி - கொழும்பு பிரதான வீதியில் அமைந்துள்ளதும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததுமான கடுகண்ணாவை பல்வேறு சுற்றுலா அம்சம் பொருந்திய பிரதேசமாகும்.

கடுகண்ணாவை நுழைவாயிலுள்ள குடையப்பட்ட கடுகண்ணாவை கற்பாறை, கடுகண்ணாவை டோசன் கோபுரம், கடுகண்ணாவை வாடிவீடு, கடுகண்ணாவை ரயில் அருங்காட்சியகம், கடுகண்ணாவை பசளை களஞ்சியத்தொகுதி உள்ளிட்ட முக்கிய சான்றுகளை கொண்டுள்ளதுடன், சுற்றுலாப் பயணிகளை கவரும் இடமாகவும் கடுகண்ணாவை உள்ளது.

# மலைச்சாரல்



## ஹக்கல பூங்கா பார்வையாளரால் வருமானம் இரட்டிப்பாக அதிகரிப்பு

**ஊவா சுழற்சி நிருபர்**



தற்போது நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பெருமளவான மக்கள் ஹக்கல பூங்காவுக்கு வருகை தந்த வண்ணமுள்ளனர். இவ்வாறு ஹக்கல பூங்காவுக்கு பெருமளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதால் கடந்த ஆண்டை விடவும் இந்த ஆண்டில் வருமானம் இரட்டிப்பாக அதிகரித்துள்ளதாக, ஹக்கல பூந்தோட்ட அதிகாரிகள் தெரிவித்தனர். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் பாடசாலை மாணவர்களும் மழை, வெய்யில், பனிப்பொழிவு எதனையும் பொருட்படுத்தாது இவ்வாறு வருகை தருகின்றனர்.

பாடசாலை விடுமுறை மற்றும் சித்திரைப் புத்தாண்டு விடுமுறை காலத்திலும் அதிகளவான மக்கள் ஹக்கல பூங்காவுக்கு வருகை தந்ததுடன், அதன் அழகையும் கண்டு களித்தனர்.



# கண்டி கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசல் இப்தாரில் ஜனாதிபதி ரணில் பங்கேற்பு

## காஸா நிதிக்கு நன்கொடைகளும் ஜனாதிபதியிடம் கையளிப்பு







கண்டி கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசல் ஏற்பாட்டில் நோன்பு துறக்கும் இப்தார் விசேட வைபவம் பள்ளிவாசலின் பொதுச் செயலாளர் கே. ஆர். ஏ. சித்தீக் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இதில் விசேட அம்சமாக பாதிக்கப்பட்ட பலஸ்தீன நாட்டு மக்களுக்காக சேகரிக்கப்பட்ட நிதியுதவிகள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

கண்டி கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசலின் பொதுச் செயலாளர் கே. ஆர். ஏ. சித்தீக் தலைமையிலான நிர்வாக குழுவினர் 22 இலட்சத்து 32 ஆயிரத்து 800 ரூபா வழங்கி வைத்தனர். காத்தான்குடி பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் ஏ. எம். எம். தௌபீக் தலைமையிலான குழுவினர் ஒரு கோடி 3 இலட்சத்து 648 ரூபாவையும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் சங்கம் 35 இலட்சம் ரூபாவையும் இதன்போது ஜனாதிபதியிடம் கையளித்தனர்.





காத்தான்குடி அநாதை நிலையத்தினால் சேகரிக்கப்பட்ட ஒரு இலட்சம் ரூபா நிதியினை முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இஸட் ஏ. எம். பைசல் வழங்கி வைத்தார். இதன் போது தொழில், வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, இராஜாங்க அமைச்சர்களான அனுராதா ஜயரத்ன, லொஹான் ரத்வத்த, ஜனாதிபதியின் பிரதம நிர்வாக அதிகாரி சாகல ரத்நாயக்க ஆகியோர்களுடன் பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா, முன்னாள் மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜெய்னுலாப்தீன் ஜமால்தீன் லாபீர் ஹாஜியார், முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இஸட் ஏ.எம். பைசல், டில்லி உயர் ஸ்தானிகராலயத்தின் பிரதி உயர்ஸ்தானிகர் டொக்டர் அன்வர் ஹம்தானி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

**இந்நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றும்போது; இவ்வருடம் சிங்கள, தமிழ் புதுவருடப் பண்டிகையும் ரமழான் பண்டிகையும் அடுத்தடுத்து நாட்களில் வந்துள்ளன. மத நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கும் அதைப் பற்றிப் பேசுவதற்கும் இயற்கையாகவே இது ஒரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளது. இது எமது மத நல்லிணக்கத்தை வளர்க்க ஓர் அரிய சந்தர்ப்பமாகவும் அமைந்துள்ளது.**

ஆகவே, இந்நாட்டிலுள்ள மக்கள் அவர்களுடைய மத அனுஷ்டானங்களை, கிரியைகளை அவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப செய்வதற்கான சுதந்திரம் உரிமை இருக்கிறது. அந்த அடிப்படையில் அமைச்சர் அலி சப்ரியுடன் சில விடயங்கள் தொடர்பில் கலந்து ஆலோசனை செய்துள்ளேன். பிரிவெனாக்களைப் பராமரிப்பது போன்று மத்ரஸாக் கல்விக்கும் சட்ட திட்டங்களை உருவாக்கி பராமரிக்க உத்தேசித்துள்ளோம். அதே போன்று மார்க்கக் கல்வி சம்பந்தமான நூல்களை இலங்கைக்கு கொண்டு வருவதில் தடைகள் உள்ளன. அவை பற்றி அதற்குரிய தடைகளை நீக்கி அவற்றை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான அனுமதியை வழங்குவதற்கும் நாங்கள் ஆலோசனை செய்துள்ளோம்.



இதேபோன்று, இந் நாட்டிலுள்ள முஸ்லிம்கள் கடந்த காலங்களில் இறுதி கிரியைகளின்போது பல பிரச்சினைகளையும் மன உலைச்சல்களையும் எதிர்நோக்கியிருந்தனர். இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் என்ற அடிப்படையில் இதற்கான புதிய குழுவை நியமனம் செய்யவுள்ளேன்.

ஒவ்வொருவரும் தங்களுடைய கடைசி விருப்பத்திற்கு ஏற்ப அல்லது தங்களுடைய சமய வழிகாட்டலுக்கு ஏற்ப தங்களுடைய இறுதிக் கிரியையின் போது அடக்குவது என்றால் அடக்கவும் தகனம் செய்வது என்றால் தகனம் செய்யவும் அவர்களுக்குத் தேவையான முறையில் உரிமையோடு செயற்படுவதற்கு சட்ட திட்டங்களையும் அதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் உத்தேசித்துள்ளோம்.

இந்நாட்டில் காணப்பட்ட பொருளாதாரப் பிரச்சினையை ஓரளவு சீர் செய்துள்ளோம். இவை போன்ற பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மக்களை ஒன்று திரட்டி தீர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளேன்.

அதே போன்று எனது மனதில் ஒரு மனக்கவலை தோன்றியுள்ளது. அதாவது, நாங்கள் இன்று நோன்பு துறப்பதற்கான பல ஏற்பாடுகளைச் செய்துள்ளோம். இதேபோன்று காஸா மக்களைப் பற்றி சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். அங்குள்ள மக்களின் நிலையைப் பற்றி பார்த்தால் இதேபோன்று அவர்களுக்கு உணவு இல்லை, இப்தார் செய்வதற்கான ஏற்பாடுகள் இல்லை, அவர்கள் யுத்தத்தில் மாட்டிக் கொண்டு இருக்கின்றார்கள். இப்போதைக்கு கிட்டத்தட்ட 35,000 பேர் அளவில் உயிரிழந்து விட்டார்கள்.

அதனால்தான், இவ்வருடம் அரசாங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நோன்பு துறக்கும் இப்தார் வைபவத்தை இடைநிறுத்தி அதற்குச் செலவு செய்யும் பணத்தையும் அந்த காஸாவுடைய மக்களுக்காக வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளோம். எனவே இந்தப் பலஸ்தீன யுத்தம் முடிவடைந்ததற்குப் பின்னால் எங்களுடைய நாட்டின் சார்பில் அந்த பலஸ்தீன மக்களுக்கு ஒரு பாடசாலை அமைத்துக் கொடுப்பதற்கு நாங்கள் ஒரு உறுதியான முடிவினைச் செய்துள்ளோம். எல்லாவற்றுக்கு மேலாக இந்த யுத்தம் முடிவுக்கு வர வேண்டும். யுத்தம் நிறைவடைந்தால் அதற்குப் பின்னரான வேலையைச் செய்ய முடியும். ஆகவே இந்த யுத்தம் ஒரு சமாதானப் பேச்சு வார்த்தை மூலமோ அல்லது ஒரு உறுதியான நடவடிக்கையின் மூலமாக முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்பது எங்களுடைய ஆசையும் விருப்பமும் எமது ஆலோசனையுமாகும்.



முன்னர் இருந்ததைப் போன்று ஒரு பலஸ்தீன அரசாங்கம் உருவாக வேண்டும். அதற்கு ஐந்து வருடங்களுக்கான அரசாங்கம் இருத்தல் வேண்டும். இது எங்களுடைய ஆலோசனையும் விருப்பமும் எதிர்பார்ப்பும் ஆகும். இவ்வாறு நடைபெற்றால் இரண்டு நாடுகளுடைய பாதுகாப்பையும் பலப்படுத்த முடியும் என்பது எங்களுடைய ஆலோசனையாகும். அதனால்தான் இந்த துயரமான விடயங்களைக் கவனத்திற் கொண்டுதான் எங்களுடைய நோன்பு துறக்கும் இப்தார் வைபவம் கூட பெரும் கொண்டாட்டத்துடன் கொண்டாடப்படவில்லை. பெரு விழாக்கள் என்று கொண்டாடும் அளவுக்கு நாங்கள் முடிவு செய்ய வில்லை என்று அவர் மேலும் தெரித்தார்.



**முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஜெயினுலாப்தீன் ஜமால்தீன் லாபீர் ஹாஜியார் இந்நிகழ்வில் நன்றியுரை நிகழ்த்தினார். இந்நிகழ்வு இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் நேரடி அஞ்சல் செய்யப்பட்டது.**

இதில் 1500 க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அதேவேளை, ஜனாதிபதி அங்கு அமைந்துள்ள இலங்கையின் முதன் முதலில் அமையப்பெற்ற நல்லிணக்க மத்திய நிலையத்தையும் பார்வையிட்டார்.

இந்த நல்லிணக்க மத்திய நிலையம் இலங்கையின் எந்தவொரு பள்ளிவாசலிலும் காணப்படாத நிலையில் இங்கு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கை முஸ்லிம்களுடைய நீண்ட கால வரலாற்றை பிரதிபலிக்கும் விடயங்கள் இந்நிலையத்தில் காணப்படுகின்றன. அதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பார்த்து வியப்படைந்ததுடன் அந்நிலையத்தை காட்சிப்படுத்தக் கூடிய வகையில் பள்ளிவாசலின் வாயலில் பெரியளவில் விளம்பரப் பதாகையொன்றை நிர்மாணித்துக் கொடுப்பதற்கும், அந்நிலையத்தை மேலும் விருத்தி செய்வதற்கான தேவையான உதவியை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி, நிர்வாக பிரதான அதிகாரி சாகல ரத்நாயக்கவுக்கு உத்தரவு பிறப்பித்தமை விசேட அம்சமாகும்.

**இந்நிகழ்வில் கண்டி மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவரும் கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசலின் பொதுச் செயலாளருமான கே. ஆர். ஏ. சித்தீக் வரவேற்புரையாற்றும்போது;**

கண்டி கட்டுக்கலை பள்ளிவாசல் பல்வேறு சிறப்புக்களைக் கொண்டு அமைந்துள்ள பள்ளிவாசல்களாகும். இன ஒருமைப்பாட்டையும் சமூக நல்லிணக்கத்தையும், சர்வ சமயத்தவர்களுக்கிடையே நல்லுறவை வலுவூட்டுகின்ற ஒரு முன்மாதிரியான பள்ளிவாசல் என்று கூறுவதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை. இப்பள்ளிவாசல் தோற்றம் பெற்ற காலத்தில் இருந்து பதவியிலுள்ள எமது நாட்டின் ஜனாதிபதி ஒருவர் வருகை தந்தது வரலாற்றில் இதுவே முதற் தடவையாகும்.





அந்த வகையில் எமது ஜனாதிபதிக்கு எமது பள்ளிவாசல் நிர்வாகிகள் சார்ப்பாகவும் மற்றும் எமது பகுதி மக்கள் சார்பாகவும் எனது முதற் கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன். அதேவேளை எமது நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் மக்கள் பாரியதொரு பிரச்சினையை எதிர்நோக்கினர். அந்த இக்கட்டான நிலையில் இருந்து நாட்டை மீளவும் மீட்டெடுத்த ஜனாதிபதிக்கு எனது நன்றியை விசேடமாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். மென்மேலும் இந்த நாட்டை சிறந்த முறையில் கட்டியெழுப்புவதற்குரிய ஆற்றலையும் திறனையும் நீடித்த ஆயுளையும் நல்ல உடல் ஆரோக்கியத்தையும் இறைவன் தர வேண்டும் என்று பிரார்த்தனை புரிக்கின்றோம்.

இப்பள்ளிவாசல் 1837 களில் ஆரம்பிக்கப்பட்டது. இப்பள்ளிவாசல் வெறுமனே வணக்க வழிபாடுகள் மாத்திரம் நடைபெறவில்லை. இப்பள்ளிவாசல் வளாகத்தில் நல்லிணக்க மத்திய நிலையம் அமைந்துள்ளது. மார்க்க அறிஞர்களை உருவாக்குவதற்கென அல் புர்க்கானிய்யா அரபுக் கல்லூரி அமைந்துள்ளது. எமது பகுதியிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவம் ஆகிய அனைத்து மாணவர்களும் கணினி தொழில் நுட்ப அறிவை கற்றுக் கொள்ளும் வகையில் ஒரு பொதுவான கணினி தொழில் நுட்ப நிலையமாக அமைந்துள்ளது. இப்பிரதேச முஸ்லிம்களது ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யக் கூடிய மையவாடியும் இங்கு அமைந்துள்ளது. அத்துடன் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுடைய ஜனாஸாக்களை கொண்டு வந்து வைத்து அதைப் பார்வையிடவும் அதைக் கபனிடுவதற்கான வசதிகளையும் கொண்ட பொதுவான இடமும் அமைக்கப்பட்டுள்ளது. இப்படி கண்டியில் சகல வளங்களையும் கொண்ட ஒரு கேந்திர நிலையமாக இப் பள்ளிவாசல் விளங்குகின்றன என்றார்.

**இந்நிகழ்வில் கட்டுக்கலை பள்ளிவாசலின் இமாம் சஹறாப்தீன் முஹமட் இர்ஸாட் (ரவாஹி) மார்க்க சொற்பொழிவை நிகழ்த்தினார். அவர் தனது உரையில்,**

அல்லாஹ் எதிர்பார்ப்பது நோன்பு காலத்தில் ஒரு முஸ்லிம் பசியில் இருக்க வேண்டும் என்பது அல்ல. அதையும் தாண்டி எமது மனதைக் கட்டுப்படுத்தி அதை உண்டால் நோன்பு முறியும் என்று இருக்கின்றோமோ பாவ காரியங்களிலிருந்து விலகி இருத்தல் வேண்டும். வறிய மக்களுடைய கஷ்ட நஷ்டங்களையும் அறிந்து கொள்வதற்காகத்தான் இந்த நோன்பு நோற்கப்படுகிறது.

நபி நாயகம் (ஸல்) அவர்கள் அதிகளவு மனித நேயத்தையே மக்களுக்கு போதித்தார்கள். ஒரு மனிதனுக்கு உதவி செய்ய வேண்டுமாயின் இனமோ மொழியோ என்பது தேவையில்லை. ஒரு மனிதனின் பசியை உணர்வதற்கு இனமோ மதமோ அவசியமில்லை. ஒரு மனிதனுக்கு உதவி செய்வதற்கு இனம் மதம் தேவையில்லை.

நாங்கள் எல்லோரும் மனித இனம் என்ற கோட்பாட்டுக்குள் இஸ்லாம் உள்ளது. நீங்கள் எல்லோரும் ஒரு தாய் ஒரு தந்தையினுடைய பிள்ளைகள் என்று எங்களைப் படைத்த இறைவன் கூறுகின்றான். உலக மக்கள் அனைவரும் ஒரு தாய் ஒரு தந்தையினுடைய பிள்ளைகள் ஆவர். அந்த இடத்தில் இறைவன் இரத்த உறவை வளர்த்து விடுகின்றான்.

நீங்கள் மொழியால் உறவால் வேறுபட்டாலும் ஒரு தாய் தந்தையர்களுடைய பிள்ளகள் தான். எனவே நாங்கள் எல்லா மனிதர்களுடைய உணர்வுகளை உணர்ந்து நடக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

03. இப் பெறுகையுடன் சம்பந்தப்பட்ட கேள்வி அழைப்பு கேள்வி நிபந்தனைகள் மற்றும் கேள்வி மாதிரிகள் கேள்விதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள் மற்றும் குறித்த வேறு விபரங்கள் அடங்கிய கேள்வி கோரல் ஆவணத்தை மீளளிக்கப்படாத ரூ. 1500/- தொகையை கீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் தலைமையகத்திற்கு செலுத்தி 2024.04.22 முதல் 2024.05.13 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பெற்றுக்கொள்ள முடிவதுடன் கேள்விதாரர்களுக்கான அறிவுறுத்தல் பத்திரம் மற்றும் கேள்வி மாதிரிப் பத்திரங்களை அலுவலக நேரங்களில் மாகாண விளையாட்டுத் திணைக்களம் அநுராதபுரம் என்ற முகவரியில் இலவசமாக பரீட்சிப்பதற்கான வசதிகள் உண்டு.

04. 2024ம் ஆண்டிற்கு குறித்த விளையாட்டு ஆடைகளை கொள்வனவு செய்வதற்காக பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியெனத் தயாரித்து மீண்டும் உறையொன்றில் இட்டு கேள்வி இலக்கம்: NCP/DS/PD/F04/விளையாட்டு ஆடைகள்/2024 - வட மத்திய மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் 2024ம் ஆண்டிற்கு குறித்த விளையாட்டு ஆடைகளை கொள்வனவு செய்வதற்கான கேள்விகோரல் என்று கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு 2024.05.13 பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும். அவ்வாறு இல்லையெனில் மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

05. சகல கேள்வியுடனும் மாகாண விளையாட்டுப் பணிப்பாளர் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட ரூ. 75,000.00 பெறுமதியான கேள்விப் பிணையொன்றை கேள்வி தரவுப் பத்திரத்தில் தரப்பட்டுள்ள தினம் வரை செல்லுபடியாகுமாறு சமர்ப்பித்தல் வேண்டும். இல்லையெனில் காசாக மாகாண விளையாட்டுத் திணைக்களத்தில் வைப்புச் செய்யலாம்.

06. 2024.05.13 பி.ப. 2.00 இற்கு கேள்விகள் மூடப்பட்ட பின்பு அன்றே பி.ப. 2.00 இற்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவர்களது பிரதிநிதிகளுக்கு அதற்காக சமுகமளிக்கலாம். மேலதிக விபரங்களை வட மத்திய மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் தொ.பே. இலக்கம் 025-4928392/ 4928391 அல்லது பெக்ஸ் இல. 025-2234473 மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**டபிள்யூ. எம். ருவன் விஜேசிங்ஹ**
**மாகாண விளையாட்டுப் பணிப்பாளர்,**
**மாகாண விளையாட்டுத் திணைக்களம்,**
**வட மத்திய மாகாணம்.**

**மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்**

**1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்து பதிவுச் சட்டம்**
**பிரிவு - 55**

அநுராதபுரம் மாவட்டத்தின் நெகெனஹிர நுவரகம்பலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் அநுராதபுரம் நகர் எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 110210 கண்ட இல. 03 பத்திர இல. 01 துண்ட இல. 110 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த,

இல.16, தேசிய வீடமைப்பு, ஆர்.எஸ்.பெர்னான்டோ மாவத்த எனும் விலாசத்தைக் கொண்ட கஸ்தூரி ஆரச்சி கங்கானம்லாகே அனுலா குணதிலக்க எனும் ஆள் 2016.11.07 ஆம் திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் 87/25A, தர்மபால மாவத்த, அநுராதபுரம் என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு 2024.04.30 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம்தரவும்.

**ஆணையாளர் நாயகம்**

**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

# விலைமனுக்கோரல்

## தேர்தல் ஆணைக்குழு

**Firewall கொள்வனவுக்கான பெறுகை நடவடிக்கை**

தேர்தல் ஆணைக்குழுவுக்காக ஆணைக்குழுவின் பெறுகைக் குழுத் தலைவரால் கீழ் குறிப்பிடப்படும் விடயத்திற்காக தகைமை பெற்ற விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இல. | பெறுகையின் பெயர் மற்றும் விபரம் | விலையேட்பு காப்பீட்டின் மதிப்பு (ரூ.) | ஏலங்களை திறத்தல் |
|---|---|---|---|
| S05/01/04 | Firewall கொள்வனவுக்கான பெறுகை | 250,000.00 | 2024 மே மாதம் 17 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு |

01. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி அடிப்படையிலான ஏலங்கோரல் முறை (NCB) ஊடாக மேற்கொள்ளப்படும்.

02. இது தொடர்பாக ஆர்வங்காட்டும் தகைமை பெற்று விலைமனுதாரர்களுக்கு தேர்தல் ஆணைக்குழுவின் பெறுகைப் பிரிவில் தேவையான மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பதோடு, கீழ் குறிப்பிடப்படும் முகவரியில் 2024 ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி முதல் 2024 மே மாதம் 16 ஆம் திகதி வரை வாரத்தில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைமனுக்கோரல் தொடர்பான ஆவணங்களைப் பரிசீலிப்பதற்கு முடியும்.

03. விலைமனுதாரர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து மீளச் செலுத்தப்படாத ரூ.1000.00 தொகையை தேர்தல் ஆணைக்குழுவின் கணக்குப் பிரிவுக்கு பணமாக மாத்திரம் செலுத்தி விலைமனுக்கோரல் ஆவணத் தொகுதியை 2024 ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி முதல் 2024 மே மாதம் 16 ஆம் திகதி வரை வாரத்தில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலப்பகுதியினுள் பெற்றுக்கொள்ள முடியும்.

04. விலைமனுக் கோரலில் உள்ளடக்கப்பட்டுள்ள விவரக் குறிப்புக்கள் (Specifications) மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பாக தெளிவுபடுத்திக்கொள்வதற்காக விலைமனுக்கோரலுக்கு முந்தைய கூட்டமொன்று 2024.05.10 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தில் நடாத்தப்படுவதுடன், அன்றைய திகதிக்கு முன்னர் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்களுக்கு அதில் பங்குபற்ற முடியும். அவ்வாறு பங்குபற்றாமல் அந்த விவரக் குறிப்புக்கள் (Specifications) மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பாக பீன்னர் சமர்ப்பிக்கப்படும் ஆட்சேபனைகள் நிராகரிக்கப்படும்.

05. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு 2024 மே மாதம் 17 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தின் முதலாம் மாடியில் அமைந்துள்ள தலைமை கணக்காளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் (Tender Box) இடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் 2024 மே மாதம் 17 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு திறக்கப்படும். அந்த சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர்களுக்கு அல்லது அவர்களுடைய பிரதிநிதியொருவருக்கு பங்கேற்க முடியும். இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூ. 250,000.00 பெறுமதிமிக்க விலையேட்பு காப்பீடொன்றை விலைமனுதாரர்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. மேலே குறிப்பிடப்பட்ட முகவரி

**தலைவர்,**
**பெறுகைக் குழு.**
**தேர்தல் ஆணைக்குழு,**
**இல. 02, சரண மாவத்தை,**
**ராஜகிரிய,**
**தொ.பே. 0112-868441**
**2024.04.16**

**வ/ப பம்பரபொட்டுவ மாரப்பன பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - இரத்தினபுரி**

## மீட்கப்படாத அடகுத் தங்க நகைகளை ஏலத்தில் விற்றல்

எமது சங்கத்திற்குச் சொந்தமான

- பெலேந்தகம கிராமிய வங்கி
- மாரப்பன கிராமிய வங்கி
- வெலிமளுவ கிராமிய வங்கி
- நிரல்கம கிராமிய வங்கி
- கல்லேல்ல கிராமிய வங்கி
- பஹல ரத்கங்க கிராமிய வங்கி
- பெல்லவல கிராமிய வங்கி
- வேவல்வத்த கிராமிய வங்கி
- தலைமையக கிராமிய வங்கி

ஆகிய கிராமிய வங்கி கிளைகள் மூலம்
**2022 டிசம்பர் 31ம் திகதி உட்பட**
மேற்படி தினம் வரை அடகு வைக்கப்பட்டு
**2024 மே 03 ந.ப. 12.00 வரை**
மீட்கப்படாத அடகுத் தங்க நகைகள்
**2024 மே 04 மு.ப. 10.00 முதல்**
இரத்தினபுரி குடுகல்வத்த

இல. 424, எனுமிடத்தில் அமைந்துள்ள சங்க அலுவலகத்தில்
பகிரங்க ஏலத்தில் விற்கப்படுவதாக இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்

பொது முகாமையாளர்,

வ/ப பம்பரபொட்டுவ மாரபன பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
இல. 424, குடுகல்வத்த, இரத்தினபுரி.
தொ.பே. இலக்கம் 045-2222332

# காணி கையகப்படுத்தல் சட்டத்தின் (460 ஆவது அத்தியாயம்) 33 ஆவது பிரிவின் கீழ் அறிவித்தல்.

**எனது இலக்கம் : DSM/PL/LAND/அகு/கிரிடா பி/அத்**

மாத்தளை மாவட்டத்தின் பல்லேபொல பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் ஹுணுகெடஎல முதியன்சேலாகே சாந்தனி ஏகநாயக்க ஆகிய என்னால், காணி கையகப்படுத்தல் சட்டத்தின் (460 ஆவது அத்தியாயம்) 33 ஆவது பிரிவின் கீழ் கீழ்காணும் அட்டவணையில் விபரிக்கப்படுகின்ற காணியினை கையகப்படுத்துவதற்கான நட்ட ஈட்டுத் தொகையான (பெயரளவு பெறுமதி) ஆயிரம் ரூபாயினை (1000.00) உரிமையாளர் பெற்றுக் கொள்ளும் பொருட்டு மாத்தளை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு இலக்கம் LA09/23 இன் கீழ் வைப்பில் இடப்பட்டுள்ளது என்பதினை இத்தால் அறிவிக்கின்றேன்.

**எச்.எம்.சி.ஏகநாயக்க,**
**பிரதேச செயலாளர்,**
**பல்லேபொல.**

**அட்டவணை**

மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்தின் பல்லேபொல பிரதேச செயலாளர் பிரிவின், உடுகொட உடசிய பத்துவ எனும் சிறு பிரிவின் கீழ் அமைந்துள்ள அகுரம்பொட கிராமத்தின், நில அளவையாளர் தலைமை அதிபதியினால் தயாரிக்கப்பட்ட இ.கி.வ 32ன் (இறுதி கிராம வரைபடத்தின்) மேலதிக இலக்கம் 24, பத்திர இலக்கம் 20, துண்டு இலக்கம் 524 ஆக குறிப்பிடப்பட்டுள்ள ஹெக்டயார் 0.0203 (பர்ச் 08) அளவினைக் கொண்ட திவுல்கஹமுல்ல எனும் காணியாகும்.

வடக்கு : துண்டு இல 336 மற்றும் 250
கிழக்கு : துண்டு இல 250
தெற்கு : துண்டு இல 250 மற்றும் 251B
மேற்கு : துண்டு இல 251B, 250 மற்றும் 336

பொதுமக்களின் நடவடிக்கை யாதென்பது பற்றி - மப/க/ப/அகுரம்கொட கனிஷ்ட வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்திற்காக காணியினை கையகப்படுத்தல்.

# BUDDHIST AND PALI UNIVERSITY OF SRI LANKA

## INVITATION FOR BIDS

## OBTAINING CLEANING SERVICE FOR THE YEAR 2024/2025

**CONTRACT NO : BPU/DPC/01/2024**

1. **The Chairman, Department Procurement Committee, Buddhist and Pali University of Sri Lanka,** on behalf of the Buddhist and Pali University of Sri Lanka invites sealed bids from eligible and qualified bidders for **Obtaining Cleaning Services for Buddhist and Pali University of Sri Lanka.** Bids should be submitted for all premises. However, the University has the right to take a final decision.
2. The intended Service Period is one (01) year from the date of 1st of July 2024 to 30th of June 2025 with a probation period of **three (03) months.**
3. Bidding will be conducted through National Competitive Bidding procedure. However, limited to the bidders who are registered within the administrative boundary of the Western Province.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be a registered Business Organization in Sri Lanka under the Business Registration Laws and a minimum of three years' experience in the field of providing Cleaning/Janitorial services at the time of the submission of the bid and at least one similar project with contract value not less than LKR.10 million.
5. Interested eligible bidders may obtain further information from the **Assistant Registrar (Administration), Buddhist and Pali University of Sri Lanka** and inspect the Bidding Documents at the address given below between **8.30 a.m. and 3.30 p.m. (Tel: 011- 2857786) from 19th of April 2024 to 07th of May 2024 during working days.**
6. Complete set of Bidding Documents (in duplicate) can be purchased on payment of a non-refundable fee of **Rs. 4,000.00.** Payments shall be made at the **Shroff Counter of the Buddhist and Pali University of Sri Lanka.**
7. A Pre-Bid meeting will be held on **25th April 2024 at 2.00 p.m.** at the Boardroom No. 2, 1st Floor, Buddhist and Pali University of Sri Lanka, No.37, Moragahahena Road, Pitipana Town, Homagama.
8. Bids shall be valid up to 03rd of August 2024.
9. Bids shall be accompanied by a Bid Security of Rs. 130,000.00 obtained from a commercial bank approved by the Central Bank of Sri Lanka (CBSL), valid up to 02nd of September 2024.
10. Sealed bids with original and duplicate should be sent to the below mentioned address by registered post or can be deposited in the tender box kept at the Administration Division at or before **2.00 p.m. on 07th of May 2024.** Both original and duplicate of the bids should be covered separately and enclosed in one cover and top left-hand corner shall be marked **"BPU/DPC/01/2024"**. The name and address of the firm submitting the bids should appear on the cover.
11. Bids will be opened immediately after closing of bids on the date : **07th of May 2024** at the Boardroom No. 2, 1st Floor, Buddhist and Pali University of Sri Lanka, No. 37, Moragahahena Road, Pitipana Town, Homagama. Authorized bidders can participate.

**Late bids will be rejected.**

**The Chairman**
**Department Procurement Committee**
**No. 37, Moragahahena Road,**
**Pitipana Town, Homagama.**
**Tel : 0112857786 Fax : 0112892333**

19th April 2024

# நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

## நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்ளைகள் அமைச்சிற்குச் சொந்தமான வாகனங்களை பழுதுபார்த்தல் மற்றும் சேவை விடயங்களுக்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2024/2025

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சிற்கு உரித்தான வாகனங்களின் புதுப்பித்தல்கள் மற்றும் முறைச் சேவை நடவடிக்கைகள் தொடர்பாக 2024/2025ஆம் ஆண்டில் பதிவு செய்து கொள்வதற்காக ஆர்வமுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து 2024.04.19 முதல் 2024.05.09 அன்று பி.ப. 2.00 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். 2024.04.19 முதல் 2024.05.09 அன்று பி.ப. 3.00 வரை விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படும்.

மேற்படி பதிவுக்கான அனைத்து விபரங்களையும் அலுவலக நேரங்களில் இவ் அமைச்சின் கணக்குப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி இல: 0112-484539 மற்றும் 0112-484538)

**பதிவுக்கான சேவை உருப்படிகள்:-**

1. வாகனங்களின் எந்திரங்களைப் புதுப்பித்தல் உட்பட ஏனைய இயந்திரவியல் வேலைகள், டீசல் பம்பிகளைப் புதுப்பித்தல் மற்றும் சேவை செய்தல், பட்டறை வேலைகள்
2. வாகனங்களின் வளிச்சீராக்கிகளைப் புதுப்பித்தல் மற்றும் சேர்விசு செய்தல்
3. வாகனங்களின் குஷன் வேலைகள் மற்றும் அப்ஹோஸ்ட்ரி வேலைகள்
4. வாகன சேர்விசு மற்றும் உள்ளக சுத்திகரிப்பு வேலைகள்
5. டயர் பொருத்துதல் மற்றும் வீல் எலைன்மன்ட் மற்றும் வீல் பெலன்ஸ் செய்யும் விடயங்கள்.
6. பெற்றறிகளை வழங்கல்
7. கெசட் ரெகோடர் மற்றும் ரிவஸ் கெமராக்களை நிறுவுதல் மற்றும் புதுப்பித்தல்
8. தகைமை சான்றிதழ் மற்றும் வாகனங்களின் தரச்சான்று அறிக்கை விலை மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்கல்
9. கண்ணாடிகளை இருட்டாக்குதல் (Tinted), வைபர் பிளேட் (Wiper Blade)> டோர் வைசர் (Door Wiser)

**விண்ணப்பிப்பதற்கான தகைமைகள் - வழங்குநர்களின் பதிவுக்கான நிபந்தனைகள்**

1. மேற்படி வழங்கல்களிற்காக இலங்கையில் பதிவு செய்யப் பெற்றுள்ள வியாபாரமொன்றாக இருத்தல் வேண்டும். (விண்ணப்பங்களுடன் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் போட்டோ பிரதியொன்று உறுதிப்படுத்தப்பட்டு சமர்ப்பித்தல் வேண்டும்)
2. அனைத்து விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர் விண்ணப்பதாரர்களின் தகைமைகள் உறுதிப்படுத்தியதன் பின்னர் அமைச்சின் வழங்குநர் ஒருவராகப் பதிவு செய்து கொள்ளப்படுவர்.
3. கிட்டிய சேவைக்காக குறைந்த பட்சம் 05 வருட முன் தகைமை இருத்தல் வேண்டும். (நிறுவன பட்டியல் இணைப்பாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்)
4. மேற்படி இரண்டு வருடங்களில் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட (2021,2022) வருடாந்த கணக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பதிவு செய்து கொள்ளும் விண்ணப்பதாரர்கள் தொடர்பாக கண்டிப்பான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
6. அமைச்சில் பதிவு செய்யப் பெற்றுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுவதுடன் தேவையேற்படின் அமைச்சில் பதிவு செய்யப் பெற்றிறாத வழங்குநர்களிடமிருந்தும் விலைமனுக்களை கோரும் முழுமையான உரிமை, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சிற்கு உரித்தாகும்.
7. எந்தவொரு வழங்குநரினதும் சேவை அசமந்தமாக இருப்பின் புதுப்பித்தல் மற்றும் சேவை வழங்குகையில் ஏதேனும் ஏமாற்று நடவடிக்கைகள் அல்லது ஏதேனும் முறைகேடுகளில் ஈடுபட்டாரென கருதப்படுவாரெனின் அவ்வாறான வழங்குநர்கள் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்பட்டு வழங்குநர் பெயர்ப்பட்டியலிலிருந்து அவர்களின் பெயர்களை நீக்குவதற்கான முழுமையான அதிகாரம் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சிற்கு உரித்தாகும்.
8. வாகனங்களிற்கான பதிவுக்காக விண்ணப்பிக்கும் அனைத்து நிறுவனங்களும் அமைச்சின் வளாகத்திலிருந்து சுமார் 20 கி.மீ. எல்லைக்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
9. உங்கள் நிறுவனமானது பெசேவ (VAT) இற்காகப் பதிவு செய்யப் பெற்றுள்ள நிறுவனமொன்றெனின் அதற்காக உள்நாட்டு வருமான வரித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

உங்கள் விண்ணப்பப்படிவப் பதிவுக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 1,500/- இற்கான தொகையை நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் பெயரில் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டுடன் உங்கள் நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் அதிகாரமளிக்கப் பெற்ற எழுத்துருவ விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்களை அடக்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சிற்கு உரித்தான வாகனங்களைப் புதுப்பித்தல் மற்றும் சேவை நடவடிக்கைகளிற்காக வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளல் 2024/2025' எனக்குறிப்பிட்டு 'பிரதான நிதி அலுவலர் கணக்குப் பிரிவு, மேல் தரைமாடி, திறைசேரியின் புதிய கட்டிடம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, கொழும்பு 01' என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அஞ்சலில் காணாமல் போகும் கடிதங்கள் தொடர்பாக பொறுப்பேற்கப்பட மாட்டாது.

**தலைவர்,**
**அமைச்சின் பெறுகைக் குழு.**
**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்**
**தேசிய கொள்கைகள் அமைச்சு.**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

# கேள்விக்கான அழைப்பு

## (இலங்கை அரசின் மானிய செயற்றிட்டங்கள்)

## விவசாயத் திணைக்களம் - பழைய கலஹா வீதி, பேராதனை

பேராதனை விவசாயத் திணைக்களத்தின், பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் பொருட்களின் பெறுகையின் முகமாக இத்தால் கேள்விகள் கோரப்படுகின்றன. 2024.04.19 முதல் 2024.05.08 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை மீளளிக்கப்படாத வைப்புத் தொகையைச் செலுத்தி மாதிரிகள் அடங்கிய ஆவணங்களை கீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| கேள்வி இலக்கம் | கொள்வனவு செய்யும் பொருட்கள்/ சேவைகள் | கேள்வி வைப்பு | | |
|---|---|---|---|---|
| | | மீளளிக்கப்படாத | காசாகச் செலுத்துவதாயின் | வங்கிப் பிணையொன்றை சமர்ப்பிப்பதாயின் |
| வி.தி.ப/ 2/3/2/2024(03) | பெரிய வெங்காய உற்பத்திக்காக சொட்டு நீர் வழங்கல் தொகுதிகள் 150ஐ வழங்கிப் பொருத்துதல் | ரூ. 12,500.00 | ரூ. 738,000.00 | ரூ.1,476,000.00 |

இப் பெறுகை வேலைக்காக பி.வீ.அ.13ம் செயற்றிட்ட வரைவின் 8.1 இல் தரப்பட்டுள்ளவாறு குறித்தவாறான விண்ணப்பதாரிகள் 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழான பதிவாளரின் கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன், அதன் பதிவுச் சான்றிதழின் உறுதி செய்த பிரதியொன்றை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி கோரலுக்கு முந்திய கூட்டம் 2024.05.02 மு.ப. 10.00 இற்கு செயற்றிட்டம் மற்றும் பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் 2024.05.09ம் திகதி மு.ப. 10.30 இற்கு முடிவடையும் நகல் பிரதியுடன் தயாரிக்கப்பட்ட பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் அதற்கு முன்பு பதிவுத் தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு அல்லது விவசாயத் திணைக்களத்தின் நிர்வாகம் 02 கிளையில் வைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டு அங்குள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வி உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் பொருட்களின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் ஏற்கப்பட்டு முடிவடைந்தவுடன் அவ் இடத்திலேயே கேள்விகள் திறக்கப்படும்.

இவ் வேளையில் கேள்வி சமர்ப்பித்தோருக்கு அல்லது அவர்களது எழுத்துமூல அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு மாத்திரம் சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**நிர்வாகம் 02 கிளை,**
**விவசாயத் திணைக்களம்,**
**பழைய கலஹா வீதி,**
**பேராதனை.**
**தொ.பே.இல. 081 - 2389127**

# INVITATION FOR BIDS (IFB)

## DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE
## VELANAI PRADESHIYA SABHA
## LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received Loan & **Grant** from the **World Bank & European Union** towards the cost of **Local Development Support Project (LDSP)**, and intends to apply part of the proceeds of this credit to payments under the Contract for the works as in described below.

2. The **Chairman, Local Authority Procurement Committee, Local Development Support Project (LDSP) on** behalf of the **Velanai Pradeshiya Sabha** now invites sealed bids from eligible and qualified bidders for the works stated as described below.

| No | Contract No | Contract Name | Estimated Cost (Rs. Mn) | Required CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Validity Period | Bid Security Amount (Rs) | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/JAF/VPS/2023/PT2/4 | Improvement work to the already constructed Pre-school under BT3 at velanai North - East | 2.07 | C8 or above Building Construction | 60 | 12-July-2024 | 21,000.00 | 09-Aug-2024 |
| 02 | LDSP/NP/JAF/VPS/2023/PT2/3 | Extension of market stalls for enchansing local product sales center at Vangalavady | 13.11 | C6 or above Building Construction | 105 | 26– July-2024 | 132,000.00 | 23-Aug-2024 |
| 03 | LDSP/NP/JAF/VPS/2023/PT3/02 | Purchasing of necessary children playing equipment & Furniture for Pre school at velanai North -East (Balance work) | 2.48 | C8 or above Building Construction | 60 | 12-July-2024 | 24,000.00 | 09 -Aug-2024 |
| 04 | LDSP/NP/JAF/VPS/2023/PT3/01 | Improvement of Chatty beach at velanai | 15.08 | C6 or above Building Construction | 93 | 26-July-2024 | 151,000.00 | 23-Aug-2024 |
| 05 | LDSP/NP/JAF/VPS/2023/BT4/01 | Construction of shopping unit at velanai north | 11.05 | C6 or above Building Construction | 105 | 26-July-2024 | 111,000.00 | 23-Aug-2024 |

3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.

4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty mentioned in Schedule for grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA).

5. Qualification requirements to qualify for contract award are included in Section 4 (Qualification Information) and Section 5 (Bidding Data and Contract Data) in the Bidding Document.

6. Interested bidders may obtain further information from **Secretary, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai. (T.P No: 021 221 1506, Fax No: 021 221 1506)** and inspect the bidding documents at **Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai** from **19-April-2024** until **09-May-2024** between **09:00 Hrs** to **15:00 Hrs** on normal working days.

7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai** from **19-April -2024** until **09- May-2024** between **09:00 Hrs** to **15:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of **Rs.3,000.00.**The method of payment will be **by cash.**

8. Bids (Original and Copy)shall be delivered to **Chairman, Local Authority Procurement Committee, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai** on or before **10:30** Hrs on **10-May-2024.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

9. All bids shall be accompanied by a **Bid Security** as stated in the Table above.

10. The Pre-Bid Meeting will be held at **Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai** on **29th April 2024** at **11:00 hrs**, Interested Bidders may participate in this meeting their own expenses.

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC),**
**Velanai Pradeshiya Sabha,**
**Vangalavady junction, Velanai**
**19.04.2024.**

# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் (SLIDA)

(பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு)

## பெறுகை அறிவித்தல்

### மேசை கணனிகள் மற்றும் UPS களை வழங்கல் மற்றும் பொருத்துதல்

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பெறுகைகள் குழுவின் தலைவரினால் பின்வரும் உபகரணங்களை வழங்கி பொருத்துவதற்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் **2024.05.10 ஆம் திகதி பி.ப.2.00** மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

| இல | உபகரண வகை | அளவு |
|---|---|---|
| 01 | மேசைக் கணிணி (Desktop Computers) | 42 |
| 02 | UPS | 42 |

விலைமனுக்கோரல்கள் நிறைவுற்றவுடன் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவக நிர்வாக கிளையில் உடனடியாக திறக்கப்படும். மனுக் கோரிக்கைகள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் மனுதாரர்களோ அல்லது அவர்களினால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளோ பங்கேற்பதற்கு அனுமதியளிக்கப்படும்.

முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தலைவர், பெறுகைகள் குழு, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம், இல.28/10, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07 என முகவரியிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது பணிப்பாளர் (நிருவாகம்), இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியினுள் நேரடியாக சமூகமளித்து இடமுடியும்.

ஒவ்வொரு விலைமனுதாரரும் மீளச் செலுத்தப்படாத **ரூ.1,500/=** வினை பணமாக மாத்திரம் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவக சிரப்பிடம் (shroff) செலுத்துவதன் மூலம் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

சகல விலைமனுக்களும் கோரிக்கையின் பேரில் மனுதாரர்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைவாக எவ்வித நிபந்தனைகளுக்குட்படாத இலங்கையில் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு வணிக வங்கியினால் வழங்கப்பட்ட **ரூ.150,000/=** திற்கான பெறுகை காப்பீட்டுத்தொகைக்கான வங்கி உத்தரவாதம் ஒன்றினை கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனு கோரிக்கைள் தயாரித்தல் மற்றும் வழங்கல் சம்பந்தமாக மனுதாரர்களால் செலவிடப்படும் எவ்வித செலவீனங்களுக்கும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் பொறுப்பேற்க மாட்டாது.

அலுவலக நாட்களில் **2024.04.19** இலிருந்து **2024.05.09** வரை **மு.ப.9.30** மணி முதல் **பி.ப.3.00** மணிவரை, பணிப்பாளர் (நிருவாகம்), இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தில் மேற்படி டெண்டர் கட்டணத்தை செலுத்திய பற்றுச் சீட்டினை சமர்ப்பிப்பதன் மூலம் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

மேலதிக தகவல்களுக்கு கொள்முதல் அலுவலர் அவர்களை **011-5980200, நீடிப்பு - 271** ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**திணைக்களத்தின் பெறுகை குழு,**
**இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்,**
**இல. 28/10, மலலசேகர மாவத்தை,**
**கொழும்பு 07.**

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைதுறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/02/PT/6569/(EL) | Spares for Alimak Elevators of Crames | 6,000.00 | 1,000.00 | 2024.05.30 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/04/PT/6581(EL) | 05 Nos. Pro-Face Display Unit for Transfer Cranes at JCT | 40,000.00 | 1,000.00 | 2024.05.30 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/PT/6577(MP) | 14 Nos. Trolley Wire Rope for 41T Mitsui STS Cranes at JCT | 120,000.00 | 3,500.00 | 2024.05.30 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/02/PT/6584(MP) | Rotary Actuators for Ram Spreaders Twin Lift & Single Lift | 160,000.00 | 3,500.00 | 2024.06.04 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/PT/6582(MP) | 24 Nos. Twist Lock Assy for Spreader of SHI 41 Tons RTG Cranes at JCT | 30,000.00 | 1,000.00 | 2024.06.04 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/23/PT/16/068 | Spares for Air Starter of Wartsila Main Engines | 25,000.00 | 1,000.00 | 2024.05.09ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/PT/02/001 | 01 No. of Hydraulic Press | 35,000.00 | 1,000.00 | 2024.05.09ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/PT/07/001 | Laser Printer (A4 Monochrome) | 18,500.00 | 1,000.00 | 2024.05.09ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/PT/02/051 | 50 Nos. of Wheel Rims for Terberg Terminal Tractors | 19,000.00 | 1,000.00 | 2024.05.10 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/PT/07/051 | Spare Parts for Terberg Terminal Tractors | 24,000.00 | 1,000.00 | 2024.05.10 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/07/068 | Leaf Spring Sets of the Dutch Lanka Trailer | 42,500.00 | 1,000.00 | 2024.05.10 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/PT/02/052 | Spares for YT220 Terberg Terminal Tractors | 100,000.00 | 3,500.00 | 2024.05.13 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்துசாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும்,எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால்,பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவுசெய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். (பிசிஏ 03 படிவம்)

3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

5. 2024 ஏப்ரல் 19 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலைநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றுகீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப் பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45,லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638.**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

### சமரியின் 195 ஓட்டங்களின் உதவியுடன்:

# மகளிர் கிரிக்கெட் வரலாற்றில் முதல் முறை 300க்கு மேல் இலக்கை எட்டியது இலங்கை




## இலங்கை மகளிர் அணிக்கு ஒரு கோடி ரூபா பணப் பரிசு




தென்னாபிரிக்காவை தோற்கடித்து உலக சாதனை வெற்றி ஒன்றை பெற்ற இலங்கை மகளிர் கிரிக்கெட் அணிக்கு சுமார் ஒரு கோடி ரூபா விசேட பணப் பரிசு ஒன்றை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் சமரி அத்தபத்துவுக்கு விசேட பாராட்டுகளை வழங்க திட்டமிட்டிருப்பதாகவும் இலங்கை கிரிக்கெட் சபை உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். மகளிர் அணியின் அனைத்து வீராங்கனைகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படும் வகையில் பணப்பரிசு வழங்கப்படவிருப்பதாகவும் இலங்கை கிரிக்கெட் உயர் அதிகாரிகள் பலர் வெளிநாட்டில் இருப்பதால் அந்தப் பரிசுத் தொகையின் பெறுமதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

மகளிர் ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் முதல் முறை 300க்கும் அதிகமான வெற்றி இலக்கை எட்டிய இலங்கை அணி தென்னாபிரிக்காவை 6 விக்கெட்டுகளால் வீழ்த்தி தொடரை 1–1 என சமநிலையில் முடித்தது.

இதன்போது அபாரமாக துடுப்பெடுத்தாடிய இலங்கை அணித் தலைவி சமரி அத்தபத்து ஆட்டமிழக்காது 195 ஓட்டங்களை பெற்று மகளிர் கிரிக்கெட்டில் மூன்றாவது அதிகூடிய ஓட்டங்களை பெற்றார்.

பொட்செப்ஸ்ரூமில் நேற்று முன்தினம் (17) நடைபெற்ற மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட தென்னாபிரிக்க மகளிர் அணி 50 ஓவர்களுக்கும் 5 விக்கெட்டுகளை இழந்து 301 ஓட்டங்களை பெற்றது.

ஆரம்ப வீராங்கனையாக வந்த அணித் தலைவி லோரா வொல்வாட் 147 பந்துகளில் ஆட்டமிழக்காது 184 ஓட்டங்களை பெற்றார்.

இந்நிலையில் பதிலெடுத்தாட வந்த இலங்கை அணிக்கு சமரி கைகொடுத்தார். ஆரம்ப வீராங்கனையாக அவர் கடைசி வரை களத்தில் இருந்து இலங்கை அணியின் வெற்றியை உறுதி செய்தார். இதன்போது சமரி மற்றும் நிலக்ஷிகா சில்வா ஐந்தாவது விக்கெட்டுக்கு பிரிக்கப்படாத இணைப்பாட்டமாக 176 ஓட்டங்களை பெற்றனர். நிலக்சிகா ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களை பெற்றார்.

சமரி தனது 195 ஓட்டங்களை பெறுவதற்கு 139 பந்துகளுக்கு முகம்கொடுத்து 26 பௌண்டரிகள் மற்றும் 5 சிக்ஸர்களை விளாசினார்.

அவரது இந்த ஓட்டம் நியூசிலாந்தின் அமெலி கெர் (2018 இல் அயர்லாந்துக்கு எதிராக ஆட்டமிழக்காது 232) மற்றும் அவுஸ்திரேலியாவின் பெலின்டா கிளார்ச் (1997 இல் டென்மார்க்கிற்கு எதிராக ஆட்டமிழக்காது 229) ஆகியோரின் இரட்டைச் சதத்திற்குப் பின்னர் மகளிர் ஒருநாள் கிரிக்கெட்டில் பெறப்பட்ட மூன்றாவது அதிகூடிய ஓட்டங்களாகும்.

இதன்மூலம் இலங்கை மகளிர் அணி 44.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 304 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. மகளிர் கிரிக்கெட்டில் இதற்கு முன்னர் 2012 ஆம் ஆண்டு நியூசிலாந்துக்கு எதிராக அவுஸ்திரேலிய அணி 289 ஓட்ட வெற்றி இலக்கை எட்டியதே சாதனையாக இருந்தது.

இதன்படி தென்னாபிரிக்க சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை மகளிர் அணி தென்னாபிரிக்காவுக்கு எதிரான டி20 தொடரை 2–1 என கைப்பற்றிய நிலையில் ஒருநாள் தொடரையும் 1–1 சமநிலை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடுத்து இலங்கை மகளிர் அணி டி20 உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியில் பங்கேற்பதற்காக அங்கிருந்து நேரடியாக அபூதாபி செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்தோனேசியாவில் 5ஆவது முறையாக எரிமலை வெடிப்பு



இந்தோனேசியாவில் எரிமலை ஒன்று ஐந்து முறை வெடித்ததை அடுத்து ஆயிரக்கணக்கானோரை அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் மீட்பாளர்கள் ஈடுபட்டிருப்பதோடு, அருகில் இருக்கும் விமானநிலையத்தை மூடிய நிர்வாகம் எரிமலை சிதைவுகள் விழுந்து சுனாமி ஏற்படும் எச்சரிக்கையையும் விடுத்துள்ளது.

சுலாவெசி தீவில் உள்ள ருவாங் எரிமலை வெடித்து இரண்டு கிலோமீற்றருக்கு மேல் புகையை கக்கியதோடு எரிமலை குழம்பையும் கக்கி வருகிறது. இதனால் விழிப்பு நிலை உச்சத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

எரிமலையை சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் சுமார் 11,000 குடியிருப்பாளர்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் மீட்பாளர்கள் நேற்று (18) ஈடுபட்டிருந்தனர். சில குடியிருப்பாளர்கள் ஏற்கனவே அச்சத்தால் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

எரிமலையின் ஒரு பகுதி நிலைகுலைந்து கடலில் விழலாம், பெரிய அளவில் அலைகள் எழலாம் என்று அஞ்சப்படுகிறது. இதுவரை உயிருடற்சேதம் குறித்துத் தகவல் இல்லை.

அண்மையில் ஏற்பட்ட இரண்டு நிலநடுக்கங்களுக்குப் பின் எரிமலையின் குமுறல் அதிகரித்துள்ளது.

எரிமலை வெடிப்பால் மலேசியா ஏர்லைன்ஸ் நிறுவனம் சபா, சரவாக் மாநிலங்களுக்கான சேவைகளை ரத்துச் செய்துள்ளது.

## வங்கியில் கடன் பெறுவதற்கு பிணத்துடன் வந்தவர் கைது



பிரேசிலில் சக்கர நாற்காலியில் இறந்து கிடந்த ஆடவருக்குக் கடன் வாங்க வங்கிக்குச் சென்ற பெண்ணைக் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

எரிக்கா வியரா நுவினிஸ் என்ற பெண் 68 வயது ஆடவரை வங்கிக்கு அழைத்து வந்தார். அவருடைய பெயரில் கடன் கேட்டதும் வங்கி ஊழியர்களுக்குச் சந்தேகம் எழுந்தது. அவர்கள் உடனடியாக அவசரச் சேவைகள் பிரிவுக்கு அழைப்பு விடுத்தனர்.

வங்கியில் பதிவுசெய்யப்பட்ட வீடியோவில் நுவினிஸ் அந்த ஆடவரைப் பிடிக்காத நேரத்தில் அவரது தலை பின்னால் சாய்வது தெரிந்தது.

'உங்களுக்குக் கேட்கிறதா? நீங்கள் கையெழுத்திட வேண்டும்' என்று நுவினிஸ் அந்த ஆடவரிடம் பேசுவது வீடியோவில் பதிவானது. 'அவர் எதுவும் பேசமாட்டார்.. அவர் அப்படித்தான்' என்று நுவினிஸ் கூறினார்.

அவசரப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் வங்கிக்கு வந்தனர். அந்த ஆடவர் இறந்துவிட்டதை அவர்கள் உறுதிப்படுத்தினர்.நுவினிஸ் அந்த ஆடவரின் பெயரில் சுமார் 3,250 டொலர் கடன் வாங்க முயன்றுள்ளார்.

### தொடரும் மழையால்

## டுபாய் விமானநிலையம் தொடர்ந்தும் ஸ்தம்பிதம்



ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் அண்டை நாடுகளில் கடும் மழை தொடர்ந்து நீடிக்கும் நிலையில் டுபாய் விமானநிலையத்தின் செயற்பாடுகளில் தொடர்ந்து இடையூறு நீடித்து வருகிறது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பெய்த அடைமழையால், வீதிகள் மற்றும் பரபரப்பான சர்வதேச விமானநிலையத்தின் சில பகுதிகளில் வெள்ள நீர் நிரம்பியது. இந்த திடீர் வெள்ளத்தில் ஓமானில் 20 பேர் உயிரிழந்ததோடு ஐக்கிய அரபு இராச்சியத்திலும் ஒருவர் பலியாகியுள்ளார். சில உள்வரும் விமானங்கள் நேற்று (18) செயற்பாடுகளை ஆரம்பித்தபோதும், டுபாய் சர்வதேச விமானநிலையத்தின் செயற்பாடுகள் முழுமையாக வழமைக்கு திரும்பவில்லை.

உலகின் இரண்டாவது பரபரப்பான விமானநிலையமாக இருக்கும் இந்த விமானநிலையத்தின் 1ஆவது முனையத்தின் உள்வரும் விமானங்கள் வியாழக்கிழமை (நேற்று) செயற்பாட்டை ஆரம்பித்தபோதும் வெளிச்செல்லும் விமானங்களில் தொடர்ந்து தாமதம் நீடிப்பதாக நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் பதிவுகள் உறுதி செய்யப்பட்டால் மாத்திரம் விமானநிலையத்திற்கு செல்லும்படி அதிகாரிகள் எக்ஸ் சமூகதளத்தில் குறிப்பிட்டுள்ளனர். முன்னதாக கடந்த புதனன்று (17) 300க்கும் அதிகமான விமானங்கள் ரத்துச் செய்யப்பட்டதோடு நூற்றுக்கணக்கான விமானப் பயணங்கள் தாமதம் அடைந்தன.

## சர்வதேச செய்திகள்

# காசா போர் நிறுத்தப் பேச்சில் பலவீனம்: மத்தியஸ்த பணியை கட்டார் மீளாய்வு

### ரபா மீதான தாக்குதல்கள் அதிகரிப்பு



காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடரும் நிலையில் போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தை பலவீனம் அடைந்திருப்பதாக மத்தியஸ்தம் வகிக்கும் கட்டார் தெரிவித்துள்ளது.

'இந்த முட்டுக்கட்டைக்கு தீர்வு காண முடியுமானவரை முயற்சித்து வருகிறோம்' என்று கட்டார் பிரதமர் மற்றும் வெளியுறவு அமைச்சர் ஷெய்க் முஹமது பின் அப்துல்ரஹ்மான் அல் தானி தெரிவித்துள்ளார்.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டும் பேச்சுவார்த்தைகளுக்கு கட்டாருடன் எகிப்து மற்றும் அமெரிக்கா மத்தியஸ்தம் வகிக்கின்றன. பல சுற்று பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றபோதும் உடன்பாடு ஒன்றை எட்டுவதில் தொடர்ந்து இழுபறி நீடித்து வருகிறது.

இந்நிலையில் தமது மத்தியஸ்த பணி தொடர்பில் மீளாய்வு செய்யவிருப்பதாக கட்டார் பிரதமர் தெரிவித்துள்ளார். போர் நிறுத்த முயற்சியில் ஈடுபட்டிருக்கும் கட்டார் குறைகூறல்கள் மற்றும் குறைமதிப்புக்கு ஆளாகி வருகிறது என்று அல் தானி தெரிவித்தார்.

'துரதிருஷ்டவசமாக, இந்த மத்தியஸ்த முயற்சியில் குறைகூறல்களுக்கும் குறுகிய அரசியல் நலனுக்காக குறைமதிப்புக்கும் உட்படுத்தப்படுவதையும் நாம் காண்கிறோம்' என்று டோஹாவில் கடந்த புதனன்று (17) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் தெரிவித்தார்.

'இதனால் கட்டார் தனது பணி குறித்து விரிவான மீளாய்வு ஒன்றை செய்யவுள்ளது. இந்த நேரத்தில் நாம் மத்தியஸ்த பணியை மீளாய்வு செய்வதோடு இந்த மத்தியஸ்த தரப்புகள் எவ்வாறு ஈடுபடுகின்றன என்பதையும் நாம் மீளாய்வு செய்யவுள்ளோம்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதில் தம்மீது குறைகூறும் தரப்புகள் பற்றி கட்டார் குறிப்பிடாதபோதும் ஹமாஸ் அமைப்புக்கு போதுமான அழுத்தம் கொடுக்க கட்டார் தவறி இருப்பதாக அமெரிக்க பாராளுமன்றத்தில் குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஹமாஸ் அமைப்பு 40 பெண்கள், சிறுவர்கள் மற்றும் வயதானவர்கள் அல்லது நோயுற்ற பணயக்கைதிகளை விடுவிக்கும் வகையில் ஆறு வார போர் நிறுத்தம் ஒன்றை மத்தியஸ்தர்கள் கடைசியாக பரிந்துரைத்திருந்தபோதும் ஹமாஸ் அமைப்பு அதனை நிராகரித்திருந்தது.

எனினும் காசாவில் இருந்து இஸ்ரேலிய துருப்புகள் வெளியேறி அங்கு முழுமையான போர் நிறுத்தம் ஒன்றுக்கு ஹமாஸ் வலியுறுத்தி வருகிறது. மறுபுறம்; இஸ்ரேல் காசாவில் போரைத் தொடரும் வகையில் தற்காலிக போர் நிறுத்தம் ஒன்றுக்கு முயற்சித்து வருவதால் இழுபறி நீடித்து வருகிறது.

இந்நிலையில் காசாவில் 195 ஆவது நாளாக நேற்றைய தினத்திலும் இஸ்ரேலின் தாக்குதல்கள் நீடித்தன. பலஸ்தீனர்களின் கடைசி அடைக்கலமாக இருக்கும் தெற்கு காசாவின் ரபா நகர் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் நேற்றும் குண்டுகளை வீசின. இந்தத் தாக்குதல்களில் ஐந்து சிறுவர்கள் உட்பட குறைந்தது 11 பேர் கொல்லப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

1.4 மில்லியனுக்கும் அதிகமான இடம்பெயர்ந்த பலஸ்தீனர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் ரபா மீது இஸ்ரேல் படை நடவடிக்கை ஒன்றுக்கு தயாராகி வரும் நிலையிலேயே அந்த நகர் மீதான தாக்குதல்கள் படிப்படியாக தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் ரபாவுடனான எல்லை பகுதிக்கு அருகில் இஸ்ரேல் மேலும் டாங்கிகள் மற்றும் கவச வாகனங்களை குவித்து வருவதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ரபா மீதான படையெடுப்பு பெரும் பேரழிவை ஏற்படுத்தும் என்று அமெரிக்கா உட்பட உலக நாடுகள் எச்சரித்து வருகின்றபோதும் ஹமாஸ் அமைப்பை ஒழிப்பதற்கு அந்த நகரை தாக்குவது தீர்க்கமானது என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

காசா நகர் மீது தொடர்ந்தும் சரமாரித் தாக்குதல்கள் இடம்பெற்றதோடு, மத்திய காசாவின் வடக்கு நுசைரத் பகுதியில் இருந்து இஸ்ரேலிய படை வாபஸ் பெற்ற பின் பல சடலங்களை மீட்டதாக காசா சிவில் பாதுகாப்பு பணியாளர்களை மேற்கொள்காட்டி பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா செய்தி வெளியிட்டுள்ளது. இங்கு மீட்கப்படாத நிலையில் பல சடலங்களும் இடிபாடுகளில் சிக்கி இருப்பதாக அந்தப் பணியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அதேபோன்று தெற்கு காசாவின் கான் யூனிஸ் நகரில் இருந்து 11 சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் சிவில் பாதுகாப்பு மற்றும் மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தினர்கள் எண்ணிக்கை தற்போது 34 ஆயிரத்தை நெருங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த அறு மாதங்களுக்கு மேலாக இஸ்ரேல் நடத்தும் இடைவிடாத தாக்குதல்களில்கள் காரணமாக காசாவுக்குள் 85 வீதத்துக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்திருப்பதோடு உணவு, சுத்தமான நீர் மற்றும் மருந்துக்கு கடும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. அதேபோன்று காசாவின் 60 வீதமான உட்கட்டமைப்புகள் சேதமடைந்து அல்லது அழிக்கப்பட்டிருப்பதாக ஐ.நா. தெரிவிக்கிறது.

காசாவில் மனிதனால் உருவாக்கப்பட்ட பஞ்சம் தனது பிடியை இறுக்கி வருவதாக பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்தின் தலைவர் பிலிப்பே லசரினி புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையில் எச்சரித்துள்ளார். காசாவில் மனிதாபிமான உதவிகளை முடக்கி இருப்பதாகவும் அங்கு ஐ.நா. நிவாரண மற்றும் பணிகள் நிறுவனத்தின் செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவர முயற்சிப்பதாகவும் இஸ்ரேல் மீது அவர் குற்றம்சாட்டினார்.

பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனம் காசா, மேற்குக் கரை, ஜோர்தான், சிரியா மற்றும் லெபனானில் உள்ள மில்லியன் கணக்காக பலஸ்தீனர்களுக்கான கல்வி, சுகாதாரம் மற்றம் உதவிகளை வழங்கி வருகிறது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி காசாவில் போர் வெடித்தது தொடக்கம் உதவிச் செயற்பாடுகளில் இந்த நிறுவனம் முதுகெலும்பாக செயற்படுவதாக ஐ.நா. அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

'காசா எங்கும் மனிதனால் உருவாக்கப்பட்ட பஞ்சம் தனது பிடியை இறுக்கி வருகிறது. வடக்கில் சிசுக்கள் மற்றும் இளம் பிள்ளைகள் ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் நீரிழப்பினால் மரணிக்க ஆரம்பித்துள்ளனர். எல்லைப் பகுதிகளில் உணவு மற்றும் சுத்தமான நீருக்கு காத்துள்ளனர். ஆனால், இந்த உதவிகளை வழங்குவது மற்றும் உயிர்களை காப்பதற்கு பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது' என்று லசரினி குறிப்பிட்டார்.

## ஈரானுக்கு பதிலளிப்பதில் இஸ்ரேல் சுயமாக முடிவு



ஈரானின் தாக்குதலுக்கு பதிலளிப்பதில் இருந்து அமைதி காப்பதற்கு நெருங்கிய நட்பு நாடுகள் வலியுறுத்தி வரும் நிலையில், இஸ்ரேல் தமது பாதுகாப்பு குறித்து சுயமாக முடிவெடுக்கும் என்று இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார்.

முதல் முறை இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை மற்றும் ஆளில்ல விமானங்கள் கொண்டு நேரடித் தாக்குதல் நடத்திய நிலையில் இஸ்ரேலை அமைதிப்படுத்தும் முயற்சியாக ஈரான் மீது தடைகளை விதிக்கும் திட்டத்தை அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜி7 நாடுகள் வெளியிட்டுள்ளன.

இஸ்ரேல் பதில் தாக்குதல் நடத்தும் பட்சத்தில் பிராந்தியத்தில் முழு அளவில் போர் வெடிக்கும் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது. இந்நிலையில் பதற்றத்தை தணிக்கும் முயற்சியாக ஜெர்மனி மற்றும் பிரிட்டன் வெளியுறவு அமைச்சர்கள் இஸ்ரேல் பயணித்தனர். கடந்த புதன்கிழமை (17) அவர்களை சந்தித்த நெதன்யாகு, 'நாம் எமது சுயமுடிவை எடுப்போம் என்பதோடு இஸ்ரேல் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று நான் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்' என்றார்.

இஸ்ரேல் பதில் தாக்குதல் ஒன்றை நடத்தினால் கடுமையாக பதிலடி கொடுப்பதாக ஈரான் எச்சரித்துள்ளது.

எனினும் இந்த வாரத்துக்குள் இஸ்ரேல் ஈரானுக்கு எதிராக குறைந்தது இரு முறை பதில் தாக்குதல் ஒன்றை நடத்த தயாராகி பின்னர் கைவிட்டதாக மூன்று இஸ்ரேலிய தரப்புகளை மேற்கோள்காட்டி ஏ.பி.சி. நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஏப்ரல் மாதம் 19ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.